# உதயன்

விலை ரூபா 6-00

மலர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 சித்திரை 22 புதன்கிழமை (05-05-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 137


# மடுவிலிருந்து படைகளை விலக்குக! ஆயர்கள் கூட்டாக வேண்டுகோள்

## ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்புவதற்கு முடிவு

கொழும்பு, மே 5

மடுத் தேவாலயப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை அங்கிருந்து வாபஸ் பெற வேண்டும் என்று கத்தோலிக்க ஆயர்கள் அனைவரும் கூட்டாக ஜனாதிபதியிடம கோரவிருக்கின்றனர்.

கடந்த வாரம் கண்டியில் நடந்த ஆயர்கள் மாநாட்டில் மடுவில் இராணுவம் நிலைகொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதையடுத்து சகல ஆயர்களும் கூட்டாக மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்ப முடிவுசெய்யப்பட்டது.

மடுவில் படையினர் நிலைகொண்டிருப்பதால் ஆலயத்தின் புனிதத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது என்றும்—

எதிர்காலத்தில் படையினர் அங்கு இருக்கும்வரை ஆலய உற்சவங்களை நடத்த முடியாது என்றும்—

[10 ஆம் பக்கம் பார்க்க]

## சொந்த இடங்களுக்கு மடு அகதிகளை அனுப்பும் பணி நேற்றே ஆரம்பம்

வவுனியா, மே 5

மடு, தச்சனார்மருதமடு அகதி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிக் குடும்பங்களை அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கும் பணி நேற்றே ஆரம்பமானது.

அந்த முகாம்களில் தங்கியிருப்போரின் சொந்த முகவரி, குடும்ப விவரம் ஆகியன நேற்றுச் சேகரிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களை திருமலைக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து கப்பல் மூலம் யாழ்ப்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக் கடற்சமரில் 11 கடற்புலிகள் மரணம்

வவுனியா, மே 5

முல்லைத்தீவுக் கடலில் கடந்த முதலாம் திகதி கடற்படையுடன் இடம்பெற்ற மோதலில் தமது தரப்பில் 11 பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

★ லெப்டினன்ட் கேணல் தர்ஷன் (முத்துக்குமார் கலைஞான தேவன்—யாழ்ப்பாணம்)

★ மேஜர் குணசீலன் (மார்க்கண்டு கந்தசாமி — மட்டக்களப்பு).

★ மேஜர் இளையசாந்தன் (சண்முகம் சத்தியசீலன்—

(9 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பொதுத்தேர்தல் செப்ரெம்பர், ஒக்டோபரில்!

புதுடில்லி, மே 5

இந்திய மக்களவைத் தேர்தல் செப்ரெம்பர் மாத இறுதியிலும் ஒக்ரோபர் மாத ஆரம்பத்திலும் நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் டாக்டர் எம். எஸ். கில் தெரிவித்தார்.

இந்தியாவில் உள்ள சகல அரசியல் கட்சிகளுடனும் அவர் ஆலோசனை நடத்தி வந்தார்.

மத்திய தேர்தல் ஆணையகத்தின் கூட்டம்நேற்று முடிவடைந்த பின்னர் அவர் தேர்தல் தொடர்பான அறிவிப்பை விடுத்தார்.

தேர்தல் ஏற்பாடுகள் முடிவடைந்த பின்னர் தேர்தல் திகதிகள் குறித்து அறிவிக்கப்படும் என்றும்—

பெரும்பாலும் ஒரு மாத காலத்தின் பின்பே அந்த அறிவிப்பை வெளியிட முடியும் என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

ஒன்பது மாநிலங்களின் சட்ட மன்றத் தேர்தல்களையும் நடத்த தேர்தல் திணைக்களம் முடிவு செய்துள்ளது. (உ-3-6)

## நெடுங்கேணியில் மோதல் சம்பவம்

வவுனியா, மே 5

நெடுங்கேணிப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுக் காலை மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது ஏற்பட்டுள்ள சேத விவரம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட வர்த்தகர் விடுவிப்பு

தென்மராட்சி, மே 5

கடந்த ஞாயிற்றுக்கிழமை இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த இராசையா நாகேந்திரம் என்ற நகைக்கடை உரிமையாளர் மறுநாள் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இவர் விடுவிக்கப்பட்ட தகவல் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு அவரது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-15-139-117-17)

## இரண்டு மின்மாற்றிகள் பொலநறுவவில் தகர்ப்பு

பொலநறுவவில் நேற்று இரு மின்மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

பொலநறுவ புதிய நகரப் பகுதியில் அமைந்துள்ள மின்மாற்றி அதிகாலை 4.30 மணியளவிலும் —

காலிங்கலல என்னும் இடத்தில் அமைந்துள்ளமின்மாற்றி நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவிலும்-குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. இதனால் அப்பகுதிகளுக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்களால் மின்சார சபைக்கு பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## சுவீடனில்யாழ்.இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டார்

### காட்டுக்குள் சடலம் மீட்பு

கொழும்பு, மே 5

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த இளைஞன் ஒருவனின் சடலம் சுவீடனில் உள்ள காட்டுப்பகுதியில் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவீடனில் கார்ஸ் றெட் என்ற காட்டுப்பகுதியில் இருந்து நேற்று முன்தினம் சடலமாகமீட்கப்பட்ட இளைஞன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என். பி. எஸ். ஞானப் பிரகாசம் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சுவீடன் சென்றடைந்த இந்த இளைஞ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா இராணுவத்தில் இன்னும் 15,000 பேர் சேர்ந்தால் முழுப் பிரதேசமும் விடுவிக்கப்படும்

### மடு படையணித் தளபதி கூறுகின்றார்

கொழும்பு மே 5

தென்னிலங்கையில் இருந்து மேலும் 15 ஆயிரம் இளைஞர்கள் இராணுவத்தில் இணைவார்களானால் குறுகியகாலத்தில் புலிகளிடமிருந்து முழுப் பிரதேசத்தையும் விடுவித்து விட முடியும்.

அண்மையில் மடுப்பகுதிக்குச் சென்ற செய்தியாளர்களிடம் பேசிய 552 ஆவது படையணித் தளபதி கேணல் மன்டக சமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மடுப்பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றியதையிட்டு பெருமிதமடைந்துள்ள தென்னிலங்கை இளைஞர்கள் இராணுவத்தில்இணைவார்களானால் வடபகுதியை வெகு விரைவில் புலிகளிடம் இருந்து முற்றாக விடுவிக்க முடியும்.

இராணுவத்தில் இணையும் எல்லோரும் உயிரிழந்து விடுவர் என்று மக்கள் நினைக்கின்றனர். மடுப் பிரதேசத்தைக் கைப்பற்றிய போது

[10 ஆம் பக்கம் பார்க்க]

## விசாரணை விரைவில் முடிவு

கொழும்பு, மே 5

கொழும்பு கிளர்ச்சித் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள — செஞ்சிலுவைச் சங்க வவுனியாக் கிளைச் செயலாளர் — சிவநாதன் கிஷோர் தொடர்பான விசாரணைகள் ஓரிரு தினங்களில் முடிவடையும் என சிரேஷ்ட பொலீஸ் அதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படைக்கு தமிழர்சேர்ப்பு; ஒரு சதி நடவடிக்கையே!

### ஆனந்தசங்கரி கூறுகிறார்

கொழும்பு, மே 5

"தமிழ் இளைஞர், யுவதிகளை இராணுவத்தில் சேர்ப்பதென்ற அரசின் அறிவிப்பு உள்நோக்கம் கொண்ட சதி நடவடிக்கையாகும்"—என்று தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப-தலைவர் வீ. ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழ் இளைஞர், யுவதிகள் மீது கொடூரம் புரிந்த இராணுவத்தினரின் காலம் மாறமுன்பே படைகளுக்கு தமிழ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உலகநாடுகளை ஏமாற்றும் அரசின் நாடகம் இது!

### பிரேமச்சந்திரன் கருத்து

"தமிழ் இளைஞர், யுவதிகளைப் படையில் சேர்க்கும் அறிவிப்பு உலக நாடுகளை ஏமாற்ற அரசு அரங்கேற்றும் ஒரு நாடகமாகும்"—என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிவிப்பானது கேலிக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அழைப்பு

06 - 04 - 1999 செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்திய குலவிளக்கு

## அமரர் கந்தர் குமாரநாதன்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் 06-05-1999 வியாழக்கிழமை காலை முதல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்தக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம ஈடேற்றுப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
திரு. திருமதி கந்தசாமி குடும்பத்தினர்

ஞானாதாரியார் வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

[சி/7436]

# மரண அறிவித்தல்கள்

## தம்பு தம்பிப்பிள்ளை

( மருதனார்மடம் )

உடுவிலைப் பிறப்பிடமாகவும் மயிலணியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தம்பிப்பிள்ளை 4-5-99 செவ்வாய்க்கிழமை மாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சின்னாச்சி அவர்களின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவனும் காலஞ்சென்ற சண்முகசுந்தரத்தின் (மின் அத்தியட்சகர்) அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, நல்லதம்பி, சீனிராஜா(சிங்கப்பூர்), சின்னத்துரை (தேநீர்ச் சாலை, மருதனார்மடம்) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (5-5-99) புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
த. அ. செல்வராசா
(பெறாமகன்)

மயிலணி,
சுன்னாகம்.

(65453)

## திருமதி சூரியன் குமுதினி

(கந்தர்மடம்)

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 7/1, புகையிரத வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சூரியன் குமுதினி 2-5-99 இல் காலமானார்.

அன்னார் சூரியனின் (யாழ் பெரிய தபாலக ஊழியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம், இராசமணியின் அன்பு மகளும் செல்லத்துரை, பத்மாவதியின் அன்பு மருமகளும் பவிந்திரன், களரிதரன் ஆகியோரின் அருமைத் தாயாரும் சோதிலிங்கம், சீதாலட்சுமியின் அன்பு மைத்துனியும் மகாலெட்சுமி, மகேந்திரன், மகேஸ்வரி, பரமேஸ்வரன், சாந்தினி, பாலச்சந்திரன், றங்கநாதன், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5-5-99) புதன்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சூரியன் (சூரி)
[கணவர்]

உதயநாகபூசனி அம்பாள் உபாசகர்,
கந்தர்மடம்.

(65456)

## செல்லத்துரை பாலசிங்கம்

(சிங்கர்)

இராஜ வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த (பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ் கொழும்பு), மனேஜர் செல்லத்துரை பாலசிங்கம் 02-05-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நீர்வேலி செல்லத்துரை ஆச்சிக்குட்டியின் அன்பு மகனும், காலஞ்சென்ற அச்செழு சின்னத்தம்பி சின்னம்மாவின் அன்பு மருமகனும், பவளராணியின் அன்புக் கணவரும், ஜெயசாந்தி, ஜெயநந்தன், ஜெயராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பார்த்தீபனின் (இலங்கை மின்சாரசபை யாழ்ப்பாணம்) அன்பு மாமனாரும் பிரதீப், ரகுதீப், கஜபாலினி ஆகியோரின் அன்புப் பேரனும் சின்னத்தம்பி, காலஞ்சென்ற இராசமணி, விஜயலட்சுமி விஜயரட்ணம் ஆகியோரின் அன்பு சகோதரரும், சபாரட்ணம், அன்னம்மா, புஸ்பவதி, சர்வானந்தம் (பெட்டா எசன்ஸ் சப்பிளையேர்ஸ் யாழ்ப்பாணம்), அற்புதராசா செல்வராணி, கோகிலராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பத்மினி, சிவலோகநாதன் (அஞ்சலகம், உரும்பிராய்), நவமணி சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (06-05-99) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பார்த்தீபன்
(மருமகன்)
இலங்கை மின்சார சபை

இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு.

(65455)

# அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 5

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வலய அலுவலகத்தில் நடைபெறும். (உ-3)


விண்ணப்பப்படிவம்

அதிபர் தரம் I,II,III
போட்டிப் பரீட்சை
விண்ணப்பப்படிவம்
விற்பனையாகின்றது

முடிவு திகதி:
24 - 5 - 99

வர்த்தமானி
பார்வையிடலாம்.

பாரதி பதிப்பகம்
430, கே.கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/7435)



லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
இன்று
T. ராஜேந்தரின்
மோனிசா
என் மோனலிசா
காட்சிகள்: 10-30, 2-30
Fax No 070-212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(65417)



ராஜா
யாழ்ப்பாணம்.
கார்த்திக் -ரம்பா
மற்றும் பலர் நடித்த
உள்ளத்தை
அள்ளித்தா
10-30. 2-00
(சி/7431)



நாகம்ஸ்
சுன்னாகம்.
ரஜனி - குஷ்பு - சரத்பாபு
ஜனகராஜ் நடித்த
அண்ணாமலை
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)
(65452)


# நிர்வாகசேவை பரீட்சை அடுத்த மாதமே நடக்கும்

யாழ்ப்பாணம், மே 5

இலங்கை நிர்வாக சேவைக்குப் புதியவர்களை ஆள் சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 6 ஆம் திகதி யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை நாளை வியாழக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் பல்வேறு காரணங்களுக்காக பரீட்சை அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு உரிய அனுமதி அட்டைகள் யாவும் கூடிய விரைவில் தபால்மூலம் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலிருந்து சுமார் 800 இற்கும் மேற்பட்டோர் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், மே 5

நல்லூரில் நேற்று இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளும் சிவிலியன் ஒருவரின் மோட்டார்சைக்கிளும் மோதியதில் சிவிலியன் காயமடைந்தார்.

மோட்டார்சைக்கிளை ஓட்டிச்சென்றவரான எஸ். பிரபாகரன் (வயது 26) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15-139)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், மே 5

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் ஈ. ஏ. சம்பியன் மறைவையொட்டி ''ஒட்லி'' மண்டபத்தில் நினைவுப் பேருரை நடத்தப்பட்டது.

கல்லூரி அதிபர் ஜி. இராஜநாயகம் ''கல்லூரி அன்பின் செயற்பாடு'' என்ற தலைப்பில் அமரர் சம்பியனின் கடந்த கால செயற்பாடுகளை எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வில் பிரதி அதிபர் வண. ஏ. ஏ. போல் ஜெப ஆராதனை நடத்தினார். (இ-185)

## பட்டிமன்றம்

யாழ்ப்பாணம் நகரமைய றோட்டரக்ட் கழகம் நடத்தும் பட்டி மன்றச் சுற்றுப் போட்டி மூன்றாவது நாளாக இன்று மாலை 3 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

வேம்படி மகளிர், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் அணிகள் இன்றைய விவாதத்தில் பங்கு பற்றும்.

## நேர்முகப் பரீட்சை

ஆயுள்வேத வைத்திய சாலைகளில் சித்த மருத்துவ பயிலுநர் வைத்தியர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி கொழும்பில் நடைபெற விருப்பதாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்தார்.

இந்த நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (உ-3)


ஏற்றுமதித் தரத்திலான
லோட்டஸ் ரயர்கள்
10 ரயர் ரியூப் ரூ 2,400/-
மொத்தமாகப் பெற்றுக்கொள்ள
விவேகானந்தா அச்சகம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/7437)



க. பொ. த. [உ. த.] அனுமதி 2001
கலை, வர்த்தக, விஞ்ஞான, கணித நெறிகளைக் கற்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி: 14 - 05 - 99
அதிபர்,
யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்.
யாழ்ப்பாணம்.
(சி/7432)


உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் சித்திரைத் திங்கள் 23 ஆம் நாள் (06 - 05 - 99) வியாழக்கிழமை பகல் 9-26 மணி முதல் 10-36 மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>ராகுலன்<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>ஜெனோமலர்<br>( ஜெனோ )<br>அவர்களுக்கும் |

திருவருள் துணையுடன் மட்டுவில் தெற்கு, ''செல்வ வாசா'' இல்லத்தில நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தயவு செய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி S. குமாரசுவாமி
நுணாவில் [மத்தி] மேற்கு,
சாவகச்சேரி.

திரு திருமதி K. மயில்வாகனம்
[மகான்]
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
[தவம் போட்டோ]

(65450)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீபெரும்புதூரில் மே 21 இல் சோனியா தேர்தல் பிரசாரம்

புதுடில்லி, மே 5

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தமது தேர்தல் பிரசாரத்தை ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட இடமான ஸ்ரீ பெரும்புதூரில் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடங்குவார்: இக் கூட்டத்தில் அவரது மகள் பிரியங்கா, மகன் ராகுல் ஆகியோரும் பங்கேற்பர்.

ஸ்ரீபெரும் புதூரில் அன்றைய தினம் மாபெரும் பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி ஸ்ரீபெரும் புதூரில் நடந்த கூட்டத்தில் சோனியா காந்தி, பிரியங்கா, ராகுல் ஆகியோர் கலந்து கொண்டனர். சோனியாவின் பிரசாரம் கடந்த தேர்தலில் காங்கிரஸ் பெரும் சரிவிலிருந்து மீள உதவியது.

தேர்தல் கூட்டங்கள் அனைத்துக்கும் மகளையும், மகனையும் உடன் அழைத்துச் செல்வதா என்பது குறித்து சோனியா இன்னும் இறுதி முடிவு செய்யவில்லை.

பிரியங்கா தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் இன்னும் பரிசீலிக்கவில்லை. இருப்பினும் பிரியங்கா தன்னுடன் கடந்த தேர்தல் சமயத்தில் கலந்து கொண்ட கூட்டங்களுக்கு இருந்த வரவேற்பையும் சோனியா ஒதுக்கிவிடத் தயாராயில்லை என்று கூறப்படுகிறது: (இ-ரி)

## கொசோவோ பேச்சில் முன்னேற்றம் இல்லை

வாஷிங்ரன், மே: 5

கொசோவோ பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக அதிபர் கிளின்ரனுக்கும் பால்கன் பிரதேசத்தின் சிறப்புத் தூதுவர் விக்ரர் சென்றோமைடினுக்கும் இடையில் நேற்று இடம் பெற்ற பேச்சுக்களில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்:

நேட்டோவின் கோரிக்கைகளை மிலோசேவிக் ஏற்றுக் கொள்ளும்வரை கொசோவோ மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படமாட்டாது என கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மிலோசேவிக்குடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் யோசனையை அமெரிக்க அதிபர் மறுத்து விட்டார்.

இவ்வாறு இருக்க கொசோவோ பிரச்சினைக்கு அமைதியான தீர்வினை எட்டும் வரை தமது முயற்சியினைத் தொடரப் போவதாக விக்ரர் சென்றோமைடின் கூறியுள்ளார்,

நேற்றுமுன்தினம் நேட்டோ படைகள் கொசோவோவில் மேற்கொண்ட வான் தாக்குதலில் 17 குடிமக்கள் உயிரிழந்துள்ளனர் 20 பேர் வரை காயம் அடைந்துள்ளனர் (இ-க)

## சோனியாகாந்திக்கு அரசியலில் இடம் இல்லை!

### வாஜ்பாய் கூறுகிறார்

புதுடில்லி, மே, 5

இந்திய அரசியலில் எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்திக்கு எவ்வித இடமும் இல்லை என பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்:

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பிரதமர் இவ்வாறு கூறினார்:

வெளிநாட்டில் பிறந்தவர் என்ற அந்தஸ்தைத் தவிர நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் நடைபெறும் செயற்பாடுகள் குறித்து என்ன அனுபவம் அவருக்கு இருக்கின்றது? என்று வாஜ்பாய் கேட்டார்:

பரம்பரையாகக் கிடைக்கும் அதிகாரம், தேசிய விழிப்புணர்வின் பற்றாக்குறையினையே காட்டி நிற்கின்றது எனவும் பிரதமர் சாடியுள்ளார். (இ-க)

## பிரிட்டிஷ் பிரதமர் பிளயர் மெசடோனியா விஜயம்

லண்டன், மே 5

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர் மெசடோனியா செல்லவுள்ளார்.

மெசடோனியா சென்று உள்ள கொசோவோ அகதிகள் நிரந்தரமாக மெசடோனியாவில் தங்கமாட்டார்கள் என மெசடோனிய மக்களுக்கு பிரதமர் தமது பயணத்தின் போது உறுதிமொழி அளிப்பார் என செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

இனவாத அழிப்பு முறை வெற்றியடையாது. நிச்சயம் தோற்றுப்போகும் என்பதை அதிபர் மிலோசேவிக் புரிந்து கொள்ள வேண்டும் என்றும்—

மிலோசேவிக்கின் தற்போதைய போராட்டம் வெற்றி பெறப்போவதில்லை என்றும் — செய்திக் குறிப்பொன்றில் பிளயர் தெரிவித்தார்.

தற்போது யூகோ மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் நேட்டோவின் தாக்குதல் அல்ல. மனிதாபிமானம் வேண்டிய ஒரு போராட்டம் என்றும் பிளயர் கூறினார். (இ-க)

## அமெரிக்காவிலேயே பெருமளவில் துப்பாக்கிகள் புழக்கத்தில்

உலகிலே துப்பாக்கிகள் வைத்திருக்கும் பொதுமக்களின் எண்ணிக்கை அமெரிக்காவிலேயே அதிகம் எனக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன:

ஏனைய கைத்தொழில் வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அமெரிக்காவிலேயே அதிகம் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன:

அண்மையில் அமெரிக்காவை உலுக்கிய சம்பவமான கொலறாடா மாவட்ட உயர்தரக் கல்லூரித் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து எடுக்கப்பட்ட ஆய்வு முடிவுகளின் படியே அமெரிக்காவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என தெரியவந்துள்ளது: (இ-க)

## லண்டன் குண்டு வெடிப்பு: ஒருவர் கைதானார்

லண்டன், மே 5

பிரிட்டனில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற மூன்றாவது குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடையவர் எனக் கருதப்படும் நபர் ஒருவரைப் பொலீஸார் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

லண்டனிலுள்ள ஓரினச் சேர்க்கையாளர்களின் மதுபானச் சாலை ஒன்றில் கடந்த சனிக்கிழமை ஆணிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட குண்டு வெடித்ததில் மூன்று பேர் இறந்தனர்: நூறுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை —

இந்தக் குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தை நேற்று முன்தினம் இளவரசர் சார்ள்ஸ் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளதுடன் காயமடைந்தோரையும் பார்வையிட்டார். (க)

## கண்டுபிடிப்பு

இஸ்லாமாபாத், மே 5

'சேர்னோபில் வைரஸ்' என்ற கணனி வைரஸின் தாக்குதலால் தகவல்களை இழந்த கணனிகளில் அந்தத் தகவல்களை மீளப் பெறும் முகமான கணனி சொப்வெயர் ஒன்றினை பங்களாதேஷை சேர்ந்த கணனி மாணவர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

இஸ்லாம் ஷெரீம் எ...ற மாணவரே மேற்படி சொப்வெயரைக் கண்டுபிகுத்தவராவர்: (இ-க)

## பாரதீய ஜனதா கூட்டணி மூலமே நாட்டில் நிலையான ஆட்சி ஏற்படும்

### கருணாநிதி கூறுகிறார்

சென்னை, மே 5

நாட்டில் பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையிலான கூட்டணி மூலமே நிலையான ஆட்சியை அமைக்க முடியும் என தி மு. க: தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மத்திய

உலக அரங்கில்

மின்துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்துக்கும் தி.மு.க. தலைவருக்கும் இடையில் சென்னையில் இடம்பெற்ற சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே இவ்வாறு கருணாநிதி கூறினார்.

மேலும் கருணாநிதி கூறியதாவது—

பாரதீய ஜனதாக்கட்சிக்கும் தி.மு.க.வுக்கும் இடையே தேர்தல் கூட்டணி அமைக்க நல்ல வாய்ப்பு உள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் வரும் தேர்தலுக்காக வெளியிடவிருக்கும் பொதுவான தேர்தல் அறிக்கையை தி.மு.க: ஏற்றுக் கொள்ளும்:

தேர்தல் ஆணையகம் தேர்தல் அட்டவணையை அறிவித்த பின்பு இரு கட்சிகளின் உயர் கொள்கையை விரிவாக்க பேச்சுக்கள் நடத்திய பின்பு தேர்தல் கூட்டணி பற்றிய முறையான அறிவிப்பு வெளியிடப்படும்:

காங்கிரஸ் மத சார்பற்ற கொள்கையை கொண்டது எனக் கருத முடியாது. ஏனெனில் காங்கிரஸின் ஆட்சிக் காலத்தில் தான் பாபர் மசூதி இடிக்கப்பட்டது அதனை அரசு மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தது — என்றார் கருணாநிதி.

அ:தி.மு.க செயலாளர் செல்வி ஜெயலலிதாவை தனிமைப் படுத்துவதற்காக இந்தக் கூட்டணி முயற்சி மேற்கொள்ளப்படுகிறதா என செய்தியாளர் கேட்டபோது —இல்லை என்று பதிலளித்த முதலமைச்சர், ஜனநாயகம் தேசிய நலன், அரசியல் உறுதிப்பாடு ஆகிய முக்கிய கொள்கையோடு நிலையான அரசியல் ஒன்றுக்காகவே கூட்டணி அமைக்கும் முயற்சி நடத்தப்படுவதாக தெரிவித்தார். (இ-க)

## தென்னிலங்கையிலிருந்து நல்லெண்ணக் குழுவினர்

### 10 ஆம் திகதி யாழ். வர ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 5

தென்பகுதியிலிருந்து நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு 30 இளைஞர், யுவதிகள் மற்றும் பத்திரிகையாளர்களும் எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கீழ் செயற்பட்டு வரும் தென்பகுதியிலுள்ள இளைஞர் கழகங்களைச் சேர்ந்தவர்களே மேற்படி மன்றத்தினால் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்படவுள்ளனர்.

இந்த இளைஞர், யுவதிகளுடன் தேசியஇளைஞர் சேவைகள் மன்ற தலைமையக அதிகாரிகள் சிலரும் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளனர்:

யாழ்ப்பாணத்தில் 5 நாள்கள் தங்கியிருக்கும் இவர்கள் இங்குள்ள இளைஞர் கழக உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதுடன் தென்பகுதிக்கும் வடபகுதிக்கும் இடையே நட்புறவை ஏற்படுத்தும் பல நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றவுள்ளனர்.

தேசிய இன விவகார நல்லிணக்க அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நல்லெண்ணக் குழுவில் காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய மூன்று மாவட்டங்களைச்சேர்ந்த இளைஞர்—யுவதிகள் அடங்குவர்:

எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ். வரும் இவர்களைப் பருத்தித்துறையில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் தேசிய இளைஞர் சேவை மன்ற யாழ். மாவட்ட அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

யாழ்ப்பாணத்தில் இவர்கள் தங்கியிருக்கும் காலத்தில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகச் சென்று பிரதேச செயலர்களைச்சந்திப்பதுடன் யாழ். அரசாங்க அதிபர் க: சண்முகநாதனையும் சந்திக்கவுள்ளனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள இளைஞர் கழகங்களின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் இவர்கள் யாழ்ப்பாணத்தில் கலாசார நிகழ்வொன்றையும் நடத்திவிட்டு 15 ஆம் திகதி மீண்டும் கொழும்புக்கு திரும்புவுள்ளனர். (இ—5)


**க. பொ. த. (உயர்தரம்) அனுமதி 2001**

க. பொ: த: (உயர்தரம்) 2001 பிரிவு அனுமதி கலைப்பிரிவில் வெற்றிடங்கள் உள்ளன: விண்ணப்பிக்கவும்.

- அதிபர்

யா/ இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம். (சி/7427)



**வாழ்த்துகின்றோம்**

எமது கல்லூரியின் வர்த்தகத்துறையில் ஆளுமை மிக்க ஆசிரியராக விளங்கிய

**திரு. அ. ஸ்ரனிஸ்லாஸ்**

அவர்கள் கல்வி நிர்வாகசேவைப் பரீட்சை III இல் சித்தியடைந்து தீவகப் பகுதியில் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்; இவரை வாழ்த்துவதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி பெருமை கொள்கின்றது.

ஆசிரிய கழகம்,
மானிப்பாய் இந்துக்கல்லூரி.

(65445)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சிவலிங்கம் பிரதீஸ்வரன் என்பவருடைய விசேட அடையாள அட்டை [இல. 090101211197] திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ் பஸ் நிலையம் வைரவர் கோயில் முன்னுள்ள அ. சந்திரன் எரிபொருள் நிலையத்தில் அல்லது அடையாள அட்டை முகவரிக்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [65429]

கரவெட்டி மத்தி ''திருத்தணி''யைச் சேர்ந்த குலசிங்கம் கைம் பெண் பத்மினி தேவி ஆகிய நான் [271 ஆம் இலக்க] காணி உறுதி ஒன்றை கடந்த 8--4—99 இல் நெல்லியடி மகாத்மா தியேட்டருக்கு முன் உள்ள உணவகத்தில் தவறவிட்டுள்ளேன் இதனைக்கண்டு எடுத்தவர்கள் கரவெட்டி மத்தி கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கவும். [65433]

## விற்பனைக்கு

வட்டுவத்தையில் உள்ள ங்கூகி என்னும் 11 பரப்பு விஸ்தீரணமான பனங்காணி விற்பனைக்கு உண்டு. இக்காணியில் 175 முதுபனைகள் உண்டு வாங்க விரும்புவோர் பிரதான வீதி, பருத்தித்துறையில் வசிக்கும் ஒய்வு பெற்ற ஆசிரியர் பொ. சிவசெந்திநாதனுடன் தொடர்பு கொள்ளவும். [65430]

## இலகு திருமண சேவை

1976 ரேவதி செவ்வாய் 8 படித்த பண்பெண்ணுக்கு கனடாவில் Sponser செய்யக்கூடிய பொருத்தமான படித்த மணமகன் தேவை சகல வித மணமக்கள் தொடர்புக்கும் ஞாயிறுகளில் நாடுங்கள்: அமரவிமல, KKS வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [65401]

## இறைச்சிக் கோழி தேவை

எல்லா வகையான இறைச்சிக் கோழிகளும் தேவை. நல்ல விலையில உடன் பணம் கொடுக்கப்படும். 19 முந்தோசா ஒழுங்கை, [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] முத்திரைச் சந்தையா, நல்லூர். [65414]

## பொருளியல்

வெளிவாரி விளைவுகள் சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்று விகிதம் ஆகிய நூல்கள் விற்பனையாகின்றன. [65208]

## அதிபர் பதவிப் படிவம்

இலங்கை அதிபர்கள் சேவையில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் தரத்திற்கு ஆள்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் விற்பனையாகின்றன. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். (சி/7348)

## திருமண சேவை

கனடாவில் வேலை பார்க்கும் இலங்கை B.Sc கணனி பட்டதாரிக்கு CIMA பட்டதாரி மணமகள் தேவை. 31 வயது பட்டதாரிக்கு அழகிய மணமகள் தேவை. வேறு மணமக்கள் குறிப்புகளும் உண்டு. தொடர்பு: விநாயகர் திருமண சேவை, 63, கல்லூரி வீதி, நீராவியடி. [65405]

எங்களிடம் சகல மதத்திலும் மணமக்கள் உண்டு. டாக்டர், எஞ்சினியர், கணக்காளர், ஆசிரியர் உண்டு. பழைய தொடர்புள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்! தூர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [65434]

## மெதடிஸ்த திருச்சபை
## தொழிற்பயிற்சி நிலையம்

161, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மெதடிஸ்த திருச்சபையினால் நடத்தப்பட்டு வரும் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆங்கிலம், தமிழ் தட்டச்சு பயிற்சி பெற்று முதன் முதலாக ஒரு தொகுதியினர் வெளியேறுகின்றனர் இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று மாலை 4-00 மணிக்கு இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

அனைவரையும் அழைக்கின்றோம்.

- நிர்வாகக் குழு

(சி/7424)

## கண்ணீர் அஞ்சலி

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் நிர்வாக சபை உறுப்பினரும், பரந்தன் தேசிய கூட்டுறவுச் சபையின் மாவட்டக் குழுத்தலைவரும் முதுபெரும் கூட்டுறவாளருமான

**பண்டிதர் க.யோ. ஆசிநாதன்**

30 - 04 - 99 இல் கொழும்பில் காலமான செய்தியைக் கேள்வியுற்று கூட்டுறவாளர்களாகிய நாம் அதிர்ச்சியும் கவலையும் கொண்டுள்ளோம். அன்னாரின் பிரிவினால் கவலையுற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(சி/7422)

## வதிரி
## தட்டுக்களரி பிள்ளையார் ஆலய
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

பரிசுக்குரிய இலக்கங்கள்

1 ஆம் பரிசு 2627 2 ஆம் பரிசு — 2619
3 ஆம் பரிசு — 875

ஆறுதல் பரிசுகள்:

1777, 116, 1043 599, 646, 1354, 941, 2231, 80, 532

★ 14 04—99 இல் நடைபெற வேண்டிய சீட்டிழுப்பு 01-05 99 இல் நடைபெற்றது

★ பரிசில்கள் யாவும் 09-05-99 ஞாயிறு பி. ப. 3.00 மணி அளவில் வழங்கப்படும்.

நாம் நன்றி செலுத்தும் பரிசில்களை அன்பளிப்புச் செய்தோர்:-

1) திரு ச சசிதரன் — றோயல், பருத்தித்துறை,
2) திரு. ச விஜயகுமார்—ஜனனி நகை மாடம், பருத்தித்துறை.
3 திரு மு. ரகுநாதன் — ஸ்ரீ ஜெயா ரேட்சென்ரர், நெல்லிரடி.
4) திரு அ மதிவதனன் அம்பிகை நகை அகம், பருத்தித்துறை.
5) திரு ஐ சிவநாதன் - மருதம், நெல்லியடி.
6) திரு. செ இராஜேந்திரன் — N S R. இண்டஸ்றியல், நெல்லியடி.
7) திரு நா. துரைராஜா - சமாதான நீதிவான். ஓய்வுபெற்ற லிகிதர், அல்வாய்
8) திரு ப ஜே தீஸ்வரன் — ஆசிரியர், வதிரி.
9) திரு கு தர்மஸ்ரீராஜா — ஆசிரியர், வதிரி.
10) திரு க தவயோகநாதன் — ரேணுகா வெல்டிங் சன்ரர், வதிரிச் சந்தி
11) திரு. சி வரதராஜா — பவானி நகை மாளிகை, நெல்லியடி.

—ஆலய பரிபாலன சபை
வதிரி தட்டுக்களரி பிள்ளையார் ஆலயம்.

நெல்லியடி வடக்கு,
கரவெட்டி.

[65428]

## The Express Institute

IRUPALAI KOPAY

யாழ். நகரின் முதன்மையான ஆசிரியர்களின் இணையற்ற சேவையில்.........

27 வது ஆண்டில்

**O/L DAY CLASS**


(8.30 A.M. — 1.30 P.M.)

இன்று ஆரம்பம்

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(65373) —அதிபர்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08 — 04 — 1935

இறப்பு 05 — 05 — 1996

திருமதி

**பிலோமினா பிரான்சிஸ்**

ஆண்டு மூன்று கடந்திட்ட போதினிலும் அம்மாவே! உன் பூமுகம் என்றும் எம்மை விட்டகலவில்லை.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக (05-05-1999) இன்று புதன்கிழமை பி, ப, 5 மணிக்கு உடுவில் செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொண்டு பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

மல்வம்,
உடுவில்.

(65413)

## THANKS GIVING SERVICE



## MISS HANNA LARSSON

We regret to announce the Home call MISS HANNA LARSSON Missionary and founder of "Elim Children's Home" in har home land Sweden on 24th April '99 Her mortal remains will be laid to rest on 07th May '99 in Sweden.

A Service of thanks giving for her life and ministries will be held on 07th May '99 at Calvary full Gospel Church, Kokuvil on 10. 00 a. m.

Manager
**Elim Children's Home**
**Manipay**

(65436)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக வேலை நிறுத்தம்
# சமரசத் தீர்வு இன்றித் தொடர்கிறது
## கடந்த வெள்ளி இடம்பெற்ற பேச்சு தோல்வி

யாழ்ப்பாணம், மே 5

சம்பள முரண்பாட்டை நீக்குதல், ஓய்வூதியம் வழங்குதல் போன்ற பலவேறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 28 ஆம் திகதி முதல் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த போதனைசாரா ஊழியர்கள் நடத்திவரும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கிறது.

இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாகப் பல்கலைக் கழகங்களின் செயற்பாடுகள் சீர்குலைந்துள்ளன.

இதற்கிடையில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவும், கல்வி அமைச்சும் மேற்படி வேலை நிறுத்தம் பற்றி ஆராய்வதற்காகக் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய கலந்துரையாடல் ஒன்று தோல்வியில் முடிவடைந்ததாகத் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

அனைத்துப் பல்கலைக்கழ ஊழியர் சங்கங்களின் சம்மேளனங்களின் பிரதிநிதிகளை அழைக்காமலேயே மேற்படி கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இதேவேளை யாழ். பல்கலைக்கழகத்திலும் ஊழியர் தொழிற்சங்கம் நடத்திவரும் போராட்டம் காரணமாக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் சில பாதிக்கப்பட்டுள்ளன.

தண்ணீர் விநியோகம் பாதுகாப்பு ஆகிய பிரிவுகளில் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

யாழ். பல்கலைக்கழகத்தில் விரிவுரை மண்டபங்கள் திறக்கப்படாமையால் தடைப்பட்டிருக்கும் விரிவுரைகள் சுமுக நிலை ஏற்பட்ட பின்னரே தொடர்ந்து நடைபெறும் எனப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

(இ-7)

## கைதான இளைஞர்கள் காங்கேசன் முகாமில்

யாழ்ப்பாணம், மே 5

வரணியில் மார்ச் 26 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள் தற்பொழுது காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பொலீஸாரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இராஜேந்திரன் ஜெகதீஸ்வரன் (வரணி வடக்கு) கிருஷ்ணன் கிருஷ்ணராசா (மாவடி வரணி ஆகிய இரு இளைஞர்களுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்கள் இருவரும் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்பவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலே கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(சி-5)

## உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 5

ஆனையிறவிலுள்ள உப்புக் கூட்டுத்தாபனத்துக்கு திரும்பச் செல்லும் வரை மாதாமாதம் எமது சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று மேற்படி கூட்டுத்தாபனத்தைச்சேர்ந்த ஊழியர்கள் கையொப்பமிட்டு யாழ். அரச அதிபர் ஊடாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுச் செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

யாழ். அரச அதிபரை அவரது அலுவலகத்தில் வைத்துச் சந்தித்த ஊழியர்கள் மேற்படி கோரிக்கை தொடர்பான மகஜரை அவரிடம் கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது தொழில் ஸ்தாபனத்துக்கு திரும்பிச் செல்லும் வரை எமக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும் அல்லது வேறு அரச கூட்டுத்தாபனங்களில் நாம் பணிபுரிவதற்கு ஏற்பாடுகள் செய்து தரவேண்டும்.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக மீண்டும் எமது தொழில் ஸ்தாபனத்துக்குச் செல்ல முடியாதிருந்த எமக்கு வழங்கப்பட்டு வந்த சம்பளம் 1997 ஜனவரியுடன் நிறுத்தப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சம்பளம் வழங்கப்படாமையினால் மேற்படி கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த 285க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

## விவசாயக் கல்லூரிக்கு மாணவர்கள் அனுமதி

யாழ்ப்பாணம், மே 5

வவுனியா விவசாயக் கல்லூரிக்கு புதிய கல்வி ஆண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்ட யாழ். மாவட்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

கே. ரமேஸ் (யாழ்ப்பாணம்), எஸ். அரவிந்தன் (சுழிபுரம்), எஸ். நாதசொரூபன் (புத்தூர்), ஆர்.வி. ஜயேந்திரன் (சுன்னாகம்), கே. சுகுணவேல் (சுழிபுரம்), சி. சுதீபா (யாழ்ப்பாணம்), வி. ஞானபாஸ்கரன் (சாவகச்சேரி)

எஸ். லக்சுமிதரன் (மானிப்பாய்), எஸ். சிவதாஸ் (சாவகச்சேரி), ஏ. ஜெயராஜ் (யாழ்ப்பாணம்), கே. வசந்தன் (மிருசுவில்), எஸ் செல்வவரதர் (சாவகச்சேரி), ரி. ஸ்ரீபன்ஸ் (உடுவில்)

ஏ. சியாமளா (யாழ்ப்பாணம்), கே. மகாலிங்கம் (யாழ்ப்பாணம்), வி சுதாராணி (யாழ்ப்பாணம்), வி. ஸ்ரீதா (சாவகச்சேரி), கே. பவதாரணி (யாழ்ப்பாணம்)

மேற்படி மாணவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி வவுனியா விவசாயக் கல்லூரியில் சமுகம் அளிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர்கள் போக்குவரத்து மற்றும் ஒழுங்குகளுக்காக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு உதவி விவசாயப் பணிப்பாளர் (விஸ்தரிப்பு) த. சிவலோகநாதன் கேட்டுள்ளார்.

(ஐ-7)

## கல்லெறிந்த சிறுவனை குளவிகள் தாக்கின

தென்மராட்சி, மே 5

புளியம்பழத்திற்கு எறிந்த கல் குளவிக்கூட்டைத் தாக்கியதால் வெளியே வந்த கருங்குளவிக் கூட்டம் ஏழு வயதுச் சிறுவனைத் துரத்தித் தாக்கிய சம்பவம் கடந்த ஞாயிறன்று காலை தென்மராட்சி பாலாவியில் இடம்பெற்றது.

குளவிகளின் தாக்குதலுக்கு உள்ளான இதே இடத்தைச் சேர்ந்த யோகேந்திரன் துஷியந்தன் (வயது 7) என்னும் மாணவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரியூசன் முடிந்து வந்த சிறுவர் கூட்டம் புளியம்பழத்திற்குக் கல்லெறிந்ததாகவும் அருகில் பனை வடலியில் உள்ள கருங்குளவிக் கூட்டில் கல் பட்டதால் குளவிகள் வெளியே வந்ததாகவும் இதனை அவதானித்த சிறுவன் ஓடியதால் அவை துரத்தித் தாக்கியதாகவும் ஏனைய சிறுவர்கள் அவ்விடத்திலேயே படுத்துக் கொண்டதால் தாக்குதலுக்கு உள்ளாகாமல் தப்பித்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## பற்றாக்குறை நீங்கியது

காரைநகர் மே 5

தீவக கல்வி வலயத்தில் 9 புதிய எழுதுநர்கள் கடமை ஏற்றுள்ளனர். இதன் மூலம் அங்கு நிலவிய ஆளணிப் பற்றாக்குறை ஓரளவு நீக்கப்பட்டுள்ளது.

(இ 7-3)

## வெடிக்காத ஷெல்

புன்னாலைக்கட்டுவன், மே 5

புன்னாலைக்கட்டுவன் தெற்கு சந்திக்கு அண்மையில் உள்ள பனங்காணியில் வெடிக்காத நிலையில் ஷெல் ஒன்று மீட்கப்பட்டு படையினரால் செயல் இழக்க வைக்கப்பட்டது.

(இ-134)

## பழமரச் செய்கைக்கு ஊக்குவிப்பு

தென்மராட்சி, மே 5

பளைப் பிரதேசத்தில் பழமரச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு இப்பகுதி மக்களுக்கு மானிய அடிப்படையில் பழமரக் கன்றுகள் வழங்கப்பட உள்ளன.

விவசாயத் திணைக்களம் இவற்றை வழங்கும்.

எட்டிலொரு ஏக்கர் காணியில் மா, தேசி, தோடை, கொய்யா, வாழை (கப்பல்) ஆகியவற்றில் ஒன்றைப் பயிரிடுவதற்கு விரும்பின் பளைப் பகுதி விவசாய போதானாசிரியரிடம் உரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மானிய உதவி மூலம் பழமரக்கன்றுகள் பயிரிடக்கூடிய காணி உரிமையாளர்கள் அந்தக் காணி உறுதியின் பிரதியுடன் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

(இ-117)

## 30 முன் பள்ளிகளுக்கு சர்வோதயம் உதவும்

கிராமிய எழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள முப்பது முன் பள்ளிகளுக்கு மலசல கூடம், நீர் விநியோகம், கற்பித்தல் உபகரணங்கள், தளபாடங்கள் போன்ற உதவிகள் சர்வோதய யாழ். மாவட்ட நிலையத்தினால் வழங்கப்படும் என்று சர்வோதய செயற்பாட்டு நிறைவேற்றுநர் எஸ். வி. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:—

இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் முப்பது முன் பள்ளிகளை புனரமைப்புச் செய்து மேற்படி உதவிகளை வழங்குவதற்கு சர்வோதயம் திட்டமிட்டுள்ளது.

1998 ஏப்ரலில் சர்வோதய யாழ். மாவட்ட நிலையம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 22 முன்பள்ளி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் மூன்று முன் பள்ளிகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை—

தென்மராட்சிப் பகுதியில் 74 விவசாயிகளுக்கும், கோழி வளர்ப்பதற்கு, 72 பேருக்கும், சிறுகைத்தொழிலுக்காக 18 பேருக்கும், சிறுவியாபாரத்திற்காக 10 பேருக்கும், கால் நடை வளர்ப்புக்காக 11 பேருக்கும், தையல் தொழிலுக்காக 9 பேருக்கும் சர்வோதயத்தினால் சுயதொழில் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்தில் இணைந்தவர்கள் தமது தொழில் துறைகளில் தற்பொழுது முன்னேறி வருகின்றனர்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-5)


## திருமண நல்வாழ்த்து!

எமது நிறுவன வணிகக் கல்வி ஆசிரியரான

**திரு. நந்தீஸ்வரன்**

அவர்களையும் அவரது துணைவியாரையும் பல்லாண்டு காலம் வாழ்க என மனமார வாழ்த்துகின்றோம்.

—சுப்றா கல்வி நிறுவனம்

[65410]



## NEW SCIENCE COLLEGE
JAFFNA

**PHYSICS**

மின்னியல்

ஆரம்பம்: 05—05—1999

புதன் பிற்பகல் 3-00 மணி

**PAPER CLASS**

புலமைகள்


திங்கள், புதன், வெள்ளி காலை 6-45

ஆசிரியர்! திரு. சம்பந்தன்

(65412)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14
—
02
—
1940



மறைவு
30
—
04
—
1998

அமரர்

**கந்தையா சுப்பிரமணியம்**

[(ஊழியர், ப. நோ. கூ. சங்கம், சுன்னாகம்]

திதி: 05—05—1999

அன்பின் திருவுருவமே
ஓர் ஆண்டு ஆனதப்பா!
ஆறிடுமோ எம் துயரம்?
ஆதரிக்க ஆயிரம் உறவுகள் உண்டு
ஆனாலும் அப்பா என்று இனி யாரை
அழைப்போம்?
உங்களைப்பிரிந்து ஆயிரம் ஆண்டுகளானாலும்
மாறாது எங்கள் நினைவுகள்.

உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மாமன், மாமி மைத்துனர்கள்.
மைத்துனிகள், பெறாமக்கள்.

''மோனிங் ஸ்ரார்'',
C/O சு. சாந்தினி,
மயிலங்காடு,
ஏழாலை தெற்கு.
சுன்னாகம்.

(சி/7410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A L 2001

**கலை, வர்த்தக பிரிவு II**

அத்துடன்

**இறுதிப் பிரிவும்**

ஆரம்பம் 08 - 05 - 99
காலை 8.00 மணி

— D. SAM

**D. M. I**

366, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

[ சி/7390 ]

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

மானிப்பாய்.

## முக்கிய அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் நிர்வாக எல்லைக்குள் எமது சபைக்கோ அல்லது தனியாருக்கோ சொந்தமான வியாபார நிலயங்களுக்கு முன்பாக சபையின் முன் அங்கீகாரமின்றி அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகள், வேறு அமைப்புகள் யாவற்றையும் 03 - 06 – 1999 ஆம் திகதிக்கு முன் அகற்றி உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்

குறிக்கப்பட்ட திகதிக்கு முன் அகற்றப்படாத அங்கீகாரமற்ற கொட்டகைகள் வேறு அமைப்புகள் யாவும் எதுவித முன் அறிவித்தலுமின்றி சபையால் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்
ஜே பி யு எம்
தலைவர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்,

(சி/7421)

## டீசல் குடித்த குழந்தை ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, மே 5

சோடாப் போத்தலுக்குள் இருந்த டீசலைக் குடித்த ஒன்றரை வயதுக் குழந்தை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10.00மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் மீசாலை வடக்கைச் சேர்ந்த மதிவதன ராசா மதுகோபி என்னும் பெண் குழந்தையே டீசல் அருந்திய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மே 5

யாழ் பிரதான வீதியில் உள்ள மெதடிஸ்த திருச்சபையின் தொழிற்பயிற்சி நிலையத்தில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்று இடம்பெறும்.

இந்தத் தொழிற் பயிற்சி நிலையத்தில் ஆங்கில, தமிழ் தட்டச்சு பயிற்சி பெற்று முதன் முதலாக வெளியேறுபவர்களே இன்றைய வைபவத்தில் சான்றிதழ் பெறுகின்றனர்.

(இ)

## திருமறைக் கலாமன்றத்தில் இன்று

யாழ்ப்பாணம், மே 5

யாழ் திருமறைக்கலா மன்றம் நடத்தும் மூன்று நாள் கருத்தரங்குத்தொடரின் இறுதி நாளான இன்று பின்நவீனத்துவமும் சைவமும் என்றதலைப்பில மேற்படி மன்ற இயக்குநர் அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளார் கருத்துரை வழங்குவார்.

திருமறைக்கலாமன்ற கேட்போர் கூடத்தில் மாலை 5 மணிக்கு கருத்துரை இடம்பெறும். (இ-க)

**கலைமகள்**
கல்வி நிலையம்
டச்சு றோட், சாவகச்சேரி.
A/L 2001
புவியியல்
by: திரு. நித்தி
ஆரம்பம்: 06 - 05 - 99
வியாழன் 3-30 மணி.
(சி/7393)

## இலங்கை மின்சார சபை மின்தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் காங்கேசன்துறை 33 கே. வி. ஏ. மின் மார்க்கத்தில் முக்கிய சில திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 08—05—1999 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரைக்கும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

இதனால் தங்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றேன்.

" இலங்கை மின்சாரசபை சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கை கொடுக்கும் "

— இலங்கை மின்சார சபை

மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ் பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

[C/7416]

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



திருமதி
**இராசா தங்கம்மா**

தாயின் மடியில் 13—01—1916
இறைவன் அடியில் 04—04—1999

அன்பின் திருவுருவாய்
பாசமிகு ஒளி விளக்காய்
பண்புக்கோர் உறைவிடமாய்
நல்வழி காட்டி மறைந்த எம்
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

இன்று (05—05—99) புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(65419)

உ

சரவணை - பள்ளம்புலம்

## அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோயில்

நவகுண்ட பக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேகம்

எண்ணெய்க்காப்பு 06 - 05 - 99 வியாழன்
காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

கும்பாபிஷேகம் 07 - 05 99 வெள்ளி
காலை 6.29 முதல் 8.20 மணி வரை.

பிரதிஷ்டா பிரதம குரு:
சிவாச்சார்யமணி
சிவஸ்ரீ நா யோகீஸ்வரக் குருக்கள்
(மேற்படி ஆலய பிரதம குரு)

- அறங்காவற் சபை

சரவணை,
வேலணை.

(65399)

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு

**ஓர் இனிய நற்செய்தி!**

# ரெலி குளோபல் கொமினிக்கேஷன்

கொடிகாமம் வீதி, (தபாற்கந்தோர் முன்பாக) கரவெட்டி.

# TELE GLOBAL COMMUNICATION KARAVEDDY

முதலாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு

**06 - 05 - 99 மட்டும்**

வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் உள்வரும் அழைப்புகள் யாவும்

**இலவசமாக வழங்கப்படும்** என்பதனை மகிழ்ச்சிகரமாக அறியத்தருகின்றோம்.

தொலைபேசி இலக்கங்கள் — 0094 - 70 - 212237
070 - 212237
021 - 3239
FAX 070 - 212237

யாவரும் பயன் பெறுங்கள்

(65092)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## திசை திருப்பல்!

மடுமாதா ஆலயப் பிரதேசத்தில் இராணுவம் நிலைகொண்டிருப்பது பெரும் விவகாரமாக மாறியிருக்கிறது. அது குறித்து ஜனாதிபதிவரை சென்று பேசப்பட்டது. படையினரை அங்கிருந்து விலக்குவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்து ஒரு வாரம் கடந்தாயிற்று.

இது இவ்வாறிருக்க, முப்படைத் தளபதிகள், உயர் இராணுவ அதிகாரிகள் சகிதம் மடுத் தேவாலயத்துக்கு விஜயம் செய்த பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த—

படையினரை அங்கிருந்து விலக்குவது சம்பந்தமாக எதுவுமே பிரஸ்தாபிக்காமல், மடுவில் உள்ள — தட்சணா மருதமடுவில் உள்ள — 8,000 அகதிக்குடும்பங்களின் வசிப்பிடமாக அமைந்த — அகதிமுகாம்களை மூடிவிடுமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

மடுப்பகுதியில் பல்லாயிரக்கணக்கில் தமிழ் மக்கள் அகதிகளாக இருப்பதால் அப் பிரதேசத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உண்டாகியுள்ளதாம் அதனாலேயே அகதி முகாம்களை மூடுவதற்குத் தாம் உத்தரவிட்டுள்ளதாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருக்கிறார். தென்பகுதியில் இருந்து மடுத் தேவாலயத்துக்கு யாத்திரிகர்கள் வருவதற்கு தமிழ் அகதிகள் இடைஞ்சலாக உள்ளனர் என்பது ரத்வத்தை கூறும் இன்னொரு காரணம்;

ஆனால் எதனை முன்னிறுத்தி இந்தக் காரணங்களை அவர் சொல்கிறார் என்பதனை வெளிப்படுத்தவில்லை. இராணுவத்தை விலக்குவதற்கும் அகதி முகாம்களை மூடுவதற்கும் எவ்வித சம்பந்தமும் இருக்க முடியாது. அகதிகளால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று அனுருத்த சொல்வது யாருடைய பாதுகாப்பைக் குறிக்கிறது? இராணுவத்தினருடையதைத் தானே!

படையினர் மடுப்பகுதியில் நிலை கொள்வதற்கு முன்னர் அங்கு இருந்த அகதிகளால் தேவாலயத்தின் பாதுகாப்புக்கு எந்த வித குந்தகமும் உண்டாகவில்லையே!

தென்பகுதியில் இருந்து யாத்திரிகர்கள் வருவதற்கும் அகதிகளுக்கும் என்ன தொடர்பு? பாதுகாப்பு அமைச்சு அனுமதியுடன் தென்னிலங்கைக் கிறிஸ்தவர்கள், இராணுவம் நிலை கொள்ளுமுன்னர் மடுமாதாவைத் தரிசித்தார்களே! தமிழ் அகதிகள் என்ன இடைஞ்சல் செய்தார்கள்? யாத்திரிகர்கள் வருகையை அரசு கட்டுப்படுத்தி இருந்ததே அன்றி, அகதிகள் ஏன் அதில் சம்பந்தப்படப் போகிறார்கள்?

அமைச்சர் அனுருத்தவின் அகதி முகாம்களை மூடும் உத்தரவு நிச்சயமாக மடுப்பகுதியில் இராணுவத்தை நிரந்தரமாக நிலை கொள்ளச் செய்வதற்கான உத்தியேயன்றி வேறில்லை.

அகதிமுகாம்களை மூடித் தமிழர்களை அந்தரிக்க விட்டுவிட்டு, சிங்கள யாத்திரிகர்களை அனுமதிக்கப் போவது என்பது இரு சாராரையும் மன மோதலுக்குத் தூண்டுவதாகும். இராணுவத்தை விலக்கும் விவகாரத்திலிருந்து திசை திருப்புவதுமாகும்.

# ஜீ. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சை

# யாழ்ப்பாண மாவட்ட பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், மே 5

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. (சாதாரணதர) பரீட்சை முடிவுகள் ஏப்ரல் 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

இதுவரை எமது அலுவலகத்துக்குக் கிடைக்கப்பெற்ற யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:-

★ யாழ். இந்துக்கல்லூரி
8டி — 5 பேர், 7டி — 17 பேர், 6 டி — 22 பேர், 5டி — 24 பேர், 4 டி — 20 பேர்.

★ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
8டி — 4 பேர், 7டி — 4 பேர், 6டி — 5 பேர், 5 டி — 5 பேர், 4டி 4சி — ஒருவர்.

★ வேம்படி மகளிர் கல்லூரி
8டி — 2 பேர், 7 டி —19 பேர், 6டி — 25 பேர், 5டி 17 பேர், 4 டி — 17 பேர்.

★ சென். ஜோன்ஸ்
8டி — ஒருவர், 7டி 1சி — 4 பேர், 7டி 1எஸ் — ஒருவர் 6டி — 8 பேர், 5டி — 7 பேர், 4டி — 7 பேர்.

★ யாழ். மத்திய கல்லூரி
5டி 1சி 1எஸ் — ஒருவர், 4டி 3சி 1 எஸ் — 3 பேர், 3டி 3சி 1எஸ் — 3 பேர்.

★ யாழ்ப்பாணக் கல்லூரி
8டி— ஒருவர், 7டி 1சி— 2 பேர், 6டி 2சி— 2 பேர், 6டி,1 சி, 1எஸ் – ஒருவர், 5டி 3சி — 3 பேர், 5டி 2சி, 1எஸ்— ஒருவர்.

★ வைத்தீஸ்வரா கல்லூரி
3டி 4சி — 4பேர், 2டி 4சி — 2பேர். 2டி 3சி— ஒருவர்.

★ சென் பற்றிக்ஸ் கல்லூரி
8டி—ஒருவர், 7டி 1சி—4 பேர், 7டி 1எஸ்— ஒருவர், 6டி 2சி—4பேர், 6டி 1சி 1எஸ் —ஒருவர், 5டி—5பேர்.

★ யாழ். இந்து மகளிர் கல்லூரி
7டி—2பேர், 6டி—4 பேர். 5டி —7 பேர். 4டி—8பேர்.

★ கனகரத்தினம் ம. வி
7டி—ஒருவர், 4டி— 2 பேர். 3டி—2பேர்.

★ கன்னியர் மடம் ம. வி. (தமிழ்)
3 டி 4 சி 1 எஸ்— ஒருவர், 3டி 3சி 2எஸ்— ஒருவர், 2டி 4சி 2எஸ்— ஒருவர்.

★ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
6டி— 2பேர், 4டி— 2பேர், 3டி 4சி 1எஸ்— ஒருவர், 3டி 3சி 1எஸ் — 2 பேர். 2டி —2 பேர்

★ கலாநிதி ஆ. தியாகராசா ம.ம.வி.
5டி—2பேர், 4டி—3பேர், 3டி— 6பேர். 2டி—3பேர்.

★ இளவாலை மெய்கண்டான் ம.வி.
6டி 1எஸ்— ஒருவர், 3டி 3சி 1 எஸ்—ஒருவர், 2டி 5சி 1எஸ் —ஒருவர், 1 டி 3சி 3எஸ்— ஒருவர்.

★ சண்டிலிப்பாய் இந்து ம.வி.
4டி 3சி 1எஸ்—ஒருவர். 3டி 4சி— 4 பேர் 2டி 4சி 1எஸ்— 2 பேர். 1டி 5சி 1எஸ்— 5 பேர்.

★ புனித அந்தோனியார் றோ. க. மகளிர் கல்லூரி
2 டி 4 சி 1 எஸ் — ஒருவர், 2 டி 3 சி 2 எஸ் — ஒருவர், 1 டி 5 சி 1 எஸ் — ஒருவர், 1 டி 3 சி 2 எஸ் — ஒருவர்.

★ தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம. வி.
7 டி 1 எஸ் — ஒருவர். 5 டி 3 சி— ஒருவர், 5 டி 1 சி 2 எஸ் — ஒருவர், 4 டி 4 சி —ஒருவர்,

★ கொடிகாமம் அரசினர் வித.
6 டி 1 சி — ஒருவர், 4 டி 4 சி — ஒருவர்.

★ யாழ். சென் ஜேம்ஸ் பெ. பா
1 டி 6 சி — ஒருவர், 1 டி 3 சி 3 எஸ் — ஒருவர், 2 டி 4 சி 2 எஸ் — ஒருவர்.

யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி
3 டி 4 சி 1 எஸ் — ஒருவர், 1 டி 4 சி 2 எஸ் — ஒருவர், 1 டி 3 சி 3 எஸ் — ஒருவர், 2 டி 4 சி — ஒருவர்.

★ யாழ். திருக் குடும்பக் கன்னியர் மடம்
8 டி — 3பேர், 5 டி 3 சி — 4 பேர்.

★ பளை மத்திய கல்லூரி
7 டி 1 எஸ் — ஒருவர், 5 டி 3 சி —ஒருவர், 4 டி 4 சி—ஒருவர்.

★ பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.
5 டி 3 சி 1 எஸ் — 2 பேர், 5 டி 3 சி —ஒருவர்.

★ புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி
4 டி 2 சி —ஒருவர், 5 டி 1 சி —ஒருவர், 6 டி 1 சி —ஒருவர்.

★ சென்.ஜேம்ஸ் ம. வி.
1 டி 3 சி 2 எஸ் — ஒருவர், 1 டி 3 சி 3 எஸ் — ஒருவர், 2 டி 2 சி 3 எஸ் — ஒருவர்.

★ நல்லூர் ஸ்தான சி. த. க. பா.
6 டி 2 சி 1 எஸ் — ஒருவர்.

★ கொழும்புத்துறை துரையப்பா வித்தி.
6 டி 2 சி — ஒருவர்.

★ வண். நாவலர் ம. வி
1 டி 4 சி 1 எஸ் — ஒருவர், 4 சி 4 எஸ் — ஒருவர், 1 சி 5 எஸ் — ஒருவர்.

★ வேலணை மேற்கு நடராசா வித்தி.
2 டி 4 சி 1 எஸ் —ஒருவர்.

★ ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி.
3 டி 4 சி 1 எஸ் — ஒருவர், 1 டி 5 சி 2 எஸ் — ஒருவர், 2 டி 4 சி 1 எஸ் — ஒருவர்.

★ கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் வித்தி
2 டி 2 சி 3 எஸ் —ஒருவர், 1டி 4 சி 1 எஸ் — 2 பேர்;

★ நயினாதீவு ஸ்ரீ கணேசா வி.
1டி 3சி 2எஸ்—ஒருவர், 3டி 3சி 1எஸ்—ஒருவர், 3டி 4சி 1எஸ்—ஒருவர்.

★ அனலைதீவு சதாசிவ ம. வி.
3டி 1சி 4எஸ்—ஒருவர், 3டி 3சி 1எஸ்—ஒருவர்.

★ புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர்.
2டி 3சி 2எஸ்—ஒருவர்.

★ புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வி.
3டி 2சி 1எஸ் - ஒருவர்.

★ புங்குடுதீவு ம. வி
2டி 1சி 3எஸ்—ஒருவர், 2 டி 4சி—ஒருவர்.

★ யாழ்ற்றன் கல்லூரி.
3டி 3சி 2எஸ் — ஒருவர், 2டி 3சி 2எஸ்—ஒருவர், 1டி 4சி 2எஸ்—ஒருவர்.

★ நயினாதீவு ம. வி.
2டி 3சி 2எஸ் - ஒருவர், 2டி 3சி 1எஸ் —ஒருவர்.

★ நாரந்தனை றோ. க.
4சி 2எஸ் —ஒருவர்.

★ கரம்பன் சண்முகநாத ம. வி.
1டி 4சி 2எஸ்—ஒருவர்.

★ ஊர்காவற்றுறை புனித மரியாள்
3சி 4எஸ்—ஒருவர்.

★ நெடுந்தீவு ம. வி.
2டி 4சி 1எஸ்—3 பேர், 4டி 2சி 2எஸ்—ஒருவர்.

★ வேலணை வைத்திலிங்கம் துரைசாமி ம. வி.
1டி 5 சி 2 எஸ் — ஒருவர், 2 டி 4 சி 1 எஸ், — ஒருவர்

★ கோண்டாவில் இந்து ம. வி.
3டி 3 சி 1 எஸ் — 2பேர், 3டி 2சி 2 எஸ் — ஒருவர் 2டி 2சி 3 எஸ் — ஒருவர், 2 டி 2சி 2எஸ் — ஒருவர்

★ வயாவிளான் ம. ம. வி
6டி 2சி — இருவர், 6டி 1 சி 1 எஸ்—ஒருவர் 5 டி 2சி 1எஸ் ஒருவர்—5டி 2சி — ஒருவர் 4டி 3சி — 2 பேர் 4டி 2சி 1எஸ் — ஒருவர் 3டி 4 சி — 2 பேர்.

★ கச்சாய் அ. த. க பாடசாலை
5டி 3சி — ஒருவர். 4டி 2சி 1எஸ் — ஒருவர் 4டி 3சி — ஒருவர், 3டி 3 சி 1 எஸ் — ஒருவர் 2டி 3சி 1 எஸ் ஒருவர்

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
8டி — ஒருவர், 6டி — 2பேர் 5டி — 2 பேர் — 4டி 4சி — ஒருவர் 3டி — 3சி 1 எஸ் — 2 பேர் 2டி— 6 பேர்

★ கொடிகாமம் திருநாவுக்கரசு ம வி.
7டி 1சி — ஒருவர், 6டி 1சி— ஒருவர், 4டி — 2பேர், 2டி 2சி 3எஸ் — ஒருவர், 1டி 5சி 1எஸ் — ஒருவர், 1டி 3சி 3எஸ்—ஒருவர். 1டி 5சி 2எஸ் ஒருவர்.

★ விடத்தற்பளை கமலாசனி வித்தி.
7டி — 3பேர், 5டி — ஒருவர், 4டி — 2பேர், 3டி — 2பேர், 2டி 3 பேர்.

★ வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி
7டி — ஒருவர், 5டி — 2பேர் 4டி — 2பேர், 3டி — 3பேர், 2டி — 5பேர்.

★ பண்ணாகம் மெய்கண்டான் ம. வி.
5டி 3சி — 3 பேர்.

★ கொழும்புத்துறை சென் ஜோசப் வித்.
2டி 5சி — ஒருவர், 3டி 3சி 2எஸ் — ஒருவர், 3சி 3எஸ்— ஒருவர்.

★ வட இந்து மகளிர் கல்லூரி.
7டி 1சி—2பேர், 6டி 1சி 1எஸ் —3பேர், 5டி 2சி 1 எஸ்— 2பேர். 4டி 2சி 2எஸ்—4பேர், 3டி 4சி 1எஸ் — 8 பேர்.

★ அல்வாய் வடக்கு றோ. க. த. க. பா
4டி 2சி 2எஸ் — ஒருவர், 1டி 2சி 3எஸ் — ஒருவர், 5சி 2எஸ் —ஒருவர், 4சி 3எஸ் —ஒருவர்.

★ எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா வித்.
5டி 3சி— ஒருவர், 5டி 2சி— ஒருவர், 2டி 5சி — ஒருவர், 2டி 4சி 2எஸ் — ஒருவர்.

★ கொழும்புத்துறை இந்து மகா வித்.
4டி 2சி 2எஸ் — ஒருவர், 3டி 2சி 2எஸ்—ஒருவர், 3டி 4சி— ஒருவர். (இ-ரி)

## நாளை

சித்திரை 23

வியாழக்கிழமை

திதி: ஷஷ்டி

முழுவதும்

நட்சத்திரம்: பூராடம்

பிற்பகல் 3.44 வரை.

சுபநேரம்: 7.26-8 56

ராகுகாலம்: 1.26-2.56

[பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி]

## உதய வாக்கு

வாழ்க்கை நாடகத்தில் உங்களது பாத்திரத்தை உங்களை விடச் சிறப்பாகச் செய்யக்கூடியவர்கள் வேறு யாருமில்லை என்பதை மறந்து விடாதீர்கள்.

- தாட் ஃபார்குடே

## அம்புலன்ஸ் வாகனத்தில் குழந்தை பிரசவம்!

நெல்லியடி, மே 5

அம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்ட நிறைமாதக் கர்ப்பிணி ஒருவர் வழியில் அம்புலன்ஸுக்குள்ளேயே ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் வல்லைவெளிப் பகுதியில் இடம்பெற்றது.

பிரசவத்துக்காக மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த இந்தப் பெண் மேலதிக அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட சமயமே வழியில் குழந்தையைப் பிரசவித்தார்.

கர்ப்பிணிப் பெண், வேதனைப்படுவதை அவதானித்த அந்த அம்புலன்ஸில் பயணம் செய்த மருத்துவமாது உடனடியாக முதலுதவிகளை மேற்கொண்டார்

அம்புலன்ஸ் மீண்டும் மந்திகையை வந்தடைந்தது. தற்பொழுது தாயும் குழந்தையும் மந்திகை மகப்பேற்று வார்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-109)

## சைவ பரிபாலன சபையின் மூன்று நாள் சைவ மாநாடு

யாழ். சைவபரிபாலன சபை நடத்தும் அகில இலங்கைச் சைவ மாநாடு நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாள்களுக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறும்.

மூன்றுநாள் மாநாட்டிலும் விரிவுரை, திருமுறைஓதல், கருத்தரங்குகள், வில்லுப் பாட்டு, நாடகம் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெறஉள்ளன.

யாழ். குடாநாட்டுப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரிய கலாசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமயப் பெரியார்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டு நிகழ்ச்சிகளை வழங்குவார்கள். (இ-7)

## பனை வீழ்ந்து மின்கம்பி சேதம்

புன்னாலைக்கட்டுவன், மே 5

புன்னாலைக்கட்டுவன் தெற்கு வைத்தியசாலை வீதியில் கடும் காற்றினால் பனை மரம் ஒன்று முறிந்து விழுந்ததனால் மின் கம்பிகள் சேதமடைந்தன

பின்னர் மின்சாரசபை ஊழியர்கள் திருத்த வேலைகளை மேற்கொண்டனர். (இ-133)

## நிவாரணம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான 74 எ பி புளிகளுக்கான நிவாரணம் இம்முறையும் பட்டியல் மூலமே விநியோகம் செய்யப்படவுள்ளது.

நிவாரணம் வழங்குவதற்கு வேண்டிய முத்திரைகள் எடுத்துவரப்படாமையால் பட்டியல் மூலமே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மே மாதத்துக்கான இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் 2 ஆம் வாரம் முதல் விநியோகம் செய்யப்படும். (இ-86)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டாக்டர் பற்றாக்குறையை நீக்குமாறு

# செஞ். சர்வதேசக் குழு கோரிக்கை

## பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிப்பு

கொழும்புத்துறை, மே 5

யாழ். மாவட்டத்தில் இருபதுசதவீத வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது; வைத்தியர்கள் பற்றாக்குறையை நீக்குமாறு செஞ்சிலுவை சர்வதேசக் குழு சுகாதார அமைச்சரிடம் கேட்டுள்ளது; மனிதநேய கோரிக்கையாக இதனை விடுத்துள்ளோம்.

இவ்வாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்ப்பாண வதிவிடப் பிரதிநிதி பெமிபேர்னட் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பத்திகையாளர் சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இச்சந்திப்பின்போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொழும்பு அலுவலக தகவல் அதிகாரி ஹார்ஷா குணவர்த்தனா, யாழ். அலுவலக செயற்பாட்டுப் பிரசார [உத்தியோகத்தர் எஸ். அன்ரன் செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்; கருத்தரங்கில் இருபதுக்கும் மேற்பட்ட வானொலி, தொலைக்காட்சி, மற்றும் பத்திரிகைச் செய்தியாளர்கள் பங்குபற்றினர்.

பெமிபேர்னட் தொடர்ந்து உரையாற்றுகையில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் செயற்படும் சிறிய அளவிலான சர்வதேச தொண்டர் அமைப்பாகும்.

முடிந்தவரையில் தனது சேவையை கடமையுணர்வுடனும், பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கி வருகிறது. எமது முக்கியமானபணி கைது செய்யப்படுபவர்களை தடுப்பு முகாம்களில், பொலீஸ் நிலையங்களில், இராணுவ முகாம்களில் சந்தித்து சுயாதீனமாக அவர்கள் எதிர்நோக்கும் பாதிப்புப்பற்றி கேட்டறிந்து உதவுவதாகும்;

கடந்த வருடம் இந்த நடவடிக்கையில் 321 பேரை தடுப்புமுகாம்களிலும், 121 பேரை பொலீஸ், இராணுவ முகாம்களிலும் சந்தித்துஅவர்களுடன் உரையாடி அவர்களது குறைகளைக்களைந்துள்வோம்.

இதேவேளையில் கடந்த வருடம் 1230நோயாளர்களை 48 தடவைகள் கப்பல் மூலம் கொழும்புவைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று, மீண்டும் அழைத்து வந்துள்ளோம்.

குடாக்கடல் ஊடாகயாழ்ப்பாணம் வந்த 17 ஆயிரத்து 74 அகதிகளில் 14 ஆயிரம் அகதிகளுக்கு சிறப்பானவைத்திய சிகிச்சை வழங்கியுள்ளோம்.

ஜெனீவா ஒப்பந்தப்படி போரில் ஈடுபட்டுள்ள படை வீரர்களுக்கும் மற்றையோருக்கும் போர் நெறிகள் பற்றிய கருத்துரைகளை நடத்தி வருகின்றோம். கடந்த வருடம் 54 தடவைகள் 4 ஆயிரத்து 325 பாதுகாப்புபடையினருக்கும்; பாடசாலை மாணவர்கள் உட்பட 51 நிலையங்களில் 3ஆயிரத்து 198 பேருக்கும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

எம்மைப் பொறுத்தவரையில் மக்களுடன் உரையாடி, மக்களது மனிதநேய பணிகளைச் சரிவரச் செய்து வருகின்றோம். இப்பணி சிறப்பாக நடை பெறுவதற்கு எமக்கு செய்தியாளர்கள், பத்திரிகையாளர்களின் அனுசரணையும் ஒத்துழைப்பும் அவசியமானது—என்றார்.

தலைமையக வெகுஜன தொடர்பு உத்தியோகத்தர் ஹார்சா — குணவர்த்தனா உரையாற்றுகையில் மக்கள் சேவையில் ஈடுபடும் எமக்கு செய்தித் தொடர்பு முக்கியமானது.

இம்மாவட்ட மக்களின் அத்தியாவசிய தேவையாக இருக்கும் பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு அரசிடம் அனுமதி கேட்டிருந்தோம்; ஒன்றில் எமது ஏற்பாட்டில் பயணிகள் கப்பல் சேவை அல்லது எங்கள் வழித்துணையுடன் பயணிகள் சேவை நடத்த விண்ணப்பம் செய்திருந்தோம்; இந்த விண்ணப்பத்துக்கு இதுவரை பதில் தரப்படவில்லை — என்றார்.

(இ-30)

## செஞ்சிலுவை அலுவலகத்தில் உலக செஞ்சிலுவைத் தினம்

யாழ்ப்பாணம், மே 5

உலகசெஞ்சிலுவைத் தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தில் பேராசிரியர் வி. சே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பேராசிரியர் கா. குகபாலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

உலக செஞ்சிலுவைத் தின பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசில்களும் இரத்ததானம் செய்தவர்களுக்கான அன்பளிப்புகளும் இந்த நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (இ-ரி)

## புத்தூரில் மெதடிஸ்த வாலிபர் பாசறை

யாழ்ப்பாணம், மே 5

யாழ். மெதடிஸ்த வாலிபர் பாசறை கடந்த 29 ஆம் திகதி முதல் 2 ஆம் திகதி வரை புத்தூர் மெதடிஸ்த வளாகத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, முள்ளி, தொல்புரம், அச்செழு, நல்லூர் போன்ற இடங்களிலிருந்து 86 வாலிபர்கள் கலந்து கொண்டனர்.

இப்பாசறையில் இறை செய்திகள் களஆய்வுகள், கலந்துரையாடல்கள், விளையாட்டு, கலைநிகழ்வுகள் யாவும் ''முன்னோக்கிப் பாய்தல்'' என்னும் தலைப்பில் நடைபெற்றன.

பாசறையின் முடிவில் யாழ். சேகர முகாமைக் குரு அருட்திரு எஸ். எஸ். ரெறன்ஸ் விசேட ஆராதனையை நடத்தினார்.

இந்தப் பாசறையின் 'எதிரொலி' என்ற நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி பருத்தித்துறையில் நடைபெறும்.

(இ)


## விக்னா கல்வி நிறுவனம்

**O/L DAY CLASS** (8.30 — 2.00)

- பிரிவு 2 03-05-1999 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில அனுமதிகள் மட்டும் வழங்கப்பட உள்ளன.
- பிரிவு 3 மிக விரைவில்.

(65432)

சுருக்கெழுத்து தட்டெழுத்து

## பயிற்சி நிலையம்

முருகமூர்த்தி கோயில் வீதி, நெல்லியடி, கரவெட்டி.

(01) சுருக்கெழுத்து தட்டெழுத்து — ஆங்கிலம்
(02) சுருக்கெழுத்து தட்டெழுத்து — தமிழ்

மேற்படி கற்கைநெறிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து (க. பொ. த. சா/த சித்தி) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி: 13 - 05 - 1999
பயிற்சி நெறி ஆரம்பம்: 15 - 05 - 1999

மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

— இணைப்பாளர்.

(இ/7425)


## NOTICE

UNIVERSITY OF JAFFNA.

POST-GRADUATE DIPLOMA IN EDUCATION EXAMINATION -1997

Application will be received from the students who are eligible to apply for the above Examinations. The Examination will commence on 20th July 1999.

Application should be made on the Specified Examination entry form which is obtainsble at the office of the Senior Assistant Registrar Exams & Admissions Branch. Completed applications should reach the office on or before 15th June 1999.

Students should payRs.50/- for eacb subject or unit at the Shrroff's Counter or Peoples Bank, University Branch, University of Jaffna and submit the application form along with the receipt.

SENIOR ASSISTANT REGISTRAR

Exams & Admissions

23-04-99

(C/7426)


ஆவரங்கால்
மத்திய முன்பள்ளி கல்வி நிலைய
வளர்ச்சி நிதிக்காக

## மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப் போட்டி

இடம்:- ஆவரங்கால் சவாரித்திடல்
காலம்:- 23. 05. 99 ஞாயிறு பிற்பகல் 2 மணி

புதிய பல காளைகள் பங்கேற்கும் விறுவிறுப்பான இப்போட்டியைக் கண்டுகளிக்கத் தவறாதீர்கள்!

—நிர்வாகிகள்

ம. மு. க. நிலையம்,
ஆவரங்கால்.

(65435)


# மரண அறிவித்தல்கள்

## இளையவி சின்னத்துரை

சங்கானை சேத்துப் பிடிச்சி வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இளையவி சின்னத்துரை (01 - 05 - 99) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னம்மா, சின்னப்பு, சுந்தரேஸ்வரி, தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிந்தாமணியின் கணவரும், இராசசுலோசனா, சந்திரகுமார் (சவூதி), இந்திரகுமார் (டென்மார்க்), ரதிவதனா, சாந்தநாயகி, ரஞ்சிதகுமார் (லண்டன்), உதயகுமார் (லண்டன்), குகனா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நவரத்தினம், தங்கத்துரை (வன்னி), பத்மநாதன், தங்கேஸ்வரன் (லண்டன்), கமலராணி (வன்னி), கமலினி (டென்மார்க்), சாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவாஸ்கரன் (லண்டன்), சிவாஜினி, திஷானி, கேமினி, சுவாஸ்கரன், கிருஷ்ணவேணன் (வன்னி), வர்சன் (வன்னி), சபேசன் (டென்மார்க்), தனுஜன் (டென்மார்க்), கிரிஜன் (டென்மார்க்), சோபியா (டென்மார்க்), ரேணுகா, றெயூசா, நிராகவன், யஸ்வினோ, திலக்சி ஆகியோரின் அன்புப் பேரனும், சுபோஜாவின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5-5-99) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
வ. நவரத்தினம்
[மருமகன்]

சேத்துப் பிடிச்சி வீதி,
சங்கானை.

[65426]

## முத்துக்குமாரசாமி தெய்வேந்திரன்

(நில அளவையாளர், மானிப்பாய்)

மானிப்பாய் தெற்கு, மேதர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் கண்டியில் வசித்தவருமாகிய முத்துக்குமாரசாமி தெய்வேந்திரன் 30 - 04 - 99 வெள்ளிக்கிழமை கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா முத்துக்குமாரசாமி (மானிப்பாய் பட்டினசபையின் முன்னாள்தலைவரும் உத்தரவு பெற்ற நில அளவையாளரும்), தங்கரத்தினம் தம்பதிகளின் நான்காவது புதல்வனும் மெனிக்காவின் அன்புக் கணவரும், சந்திரகுமார் (Growth Lanka Colombo), உஷா (களுபோவில), சுகுமார் (மத்திய கிழக்கு நாடு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஏ. ரவீந்திரனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பாலேந்திரன் (இலங்கைவங்கி, யாழ்ப்பாணம்) டாக்டர் சீதா மகாதேவா (லண்டன்) மகேந்திரன் (பொறியியலாளர், லண்டன்). இராஜேந்திரன் (கணக்காளர், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05-05-1999) இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு, 79/7, Hathbodhiya Road, Kalubowila இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்
மு. இராஜேந்திரன் [ராஜே],
(சகோதரன்)
மேதர் ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

A. ரவீந்திரன் (மருமகன்)
79/7 Hathbodhiya Road,
Kalubowila,
T. P. No. 074-202933.

(65442)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் ஜூன் முதல் கடற்றொழில் டிப்ளோமா கல்வி

யாழ்ப்பாணம், மே 5

யாழ். பல்கலைக்கழக கடல் வள அபிவிருத்தி நிலையத்தினால் கடற்றொழில் டிப்ளோமா நெறி ஜூன்மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக மூதவை இதற்கான அனுமதியை அளித்துள்ளதையடுத்து மேற்படி டிப்ளோமா நெறியை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் பேராசிரியர் கா. சித்திரவடிவேல் மேற்கொண்டு வருகிறார்.

ஒரு வருட காலத்தைக் கொண்ட இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் விரைவில் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படவுள்ளன.

இந்தக் கற்கைநெறிக்கு 25 மாணவர்களே முதலில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். விரிவுரைகள், ஆய்வுகூடசெய் முறைகள், வெளிக்கள வேலைகள் இந்தக்கற்கை நெறியில் இடம்பெறவுள்ளன.

கடற்றொழில் துறையை மேம்படுத்தும் பொருட்டு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கோரிக்கையையடுத்தே இந்த கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## யாழ். ஆஸ்பத்திரிக்கு 13 டாக்டர் நியமனம்

யாழ்ப்பாணம், மே 5

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து இவ்வாண்டு வெளியேறிய 64 டாக்டர்களில் 13 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் தமது உள்ளகப் பயிற்சியினை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

ஏனைய 51 பயிலுனர் டாக்டர்கள் வெளிமாவட்டங்களில் தமது உள்ளகப் பயிற்சியினைத் தொடர சென்றுள்ளனர். (உ-15-139-173)

## வள்ளங்களில்பாய்பாவிக்க மீனவருக்கு அனுமதி

குருநகர், மே 5

யாழ். கரையோரப் பகுதிகளில் மீன்பிடிக்கும் பணியில் ஈடுபடும் வள்ளங்களில் பாய் போட விதிக்கப்பட்டிருந்த தடை நாளை மறுதினம் நீக்கப்படுவதாக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ். நகரத் தளபதியுடன் அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது இது தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பாஷையூர் மீனவர்கள் நீல நிறத்திலான பாயையும், குருநகர்மீனவர்கள் வெள்ளை நிறத்திலான பாயையும், கொழும்புத்துறை மீனவர்கள் சிவப்பு நிறத்திலான பாயையும் பாவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (உ-3-51)

## குடும்பஸ்தர் கைது!

நெல்லியடி, மே 5

அல்வாய்ப் பகுதியில், அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த பல திருட்டுச் சம்பவம் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில், குடும்பஸ்தர் ஒருவர், படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தலைமுடி அலங்கோலமான முறையில் கத்தரிக்கப்பட்டு, ''நான் கள்வன்'' என்ற அட்டையுடன் நாவலடிச் சந்தியில் இவர் முழங்காலில் இருத்தி வைக்கப்பட்டிருந்தார்

இத்திருட்டுக்களில் ஈடுபட்ட மேலும் பலரைத் [illegible] இராணுவத்தினர் வலைவிரித்துள்ளனர். (இ-109)

## கணனிமயப்படுத்தல்

பருத்தித்துறை, மே 5

வடமராட்சி கல்வி வலய கணக்கியல், புள்ளிவிவரப்பகுதிகள் கணனி மயப்படுத்தப்படவுள்ளன. இதற்கென ஐந்து கணனி இயந்திரங்களும் அவற்றை இயக்குவதற்கு ஒரு ஜெனரேற்றரும் கிடைத்துள்ளன.

இவற்றைப் பொருத்துவதற்கு இரண்டு இலட்சத்து 24 ஆயிரம் ரூபா செலவில் குளிரூட்டி உட்பட ஏனைய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. [க-118]

## நிரந்தரமான மரணவிசாரணை அதிகாரி இல்லை

நெல்லியடி, மே 5

வடமராட்சிப் பகுதியில், நிரந்தரமான திடீர் மரண விசாரணை அதிகாரி எவரும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவானே மரண விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார். (இ-109)


## தேவை

அச்சுக்கோர்ப்பாளர் தேவை

இருபாலரும் விண்ணப்பிக்கலாம். நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம்

430 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/7435)



Jolly Stars Sports Club- Jaffna

Limited Overs

**Cricket Tournament - 1999**

Sponsored by

E.S. PERAMPALAM & Co.

For the

**JOLLY STARS TROPHY**

Entries are called from the Affiliated Clubs of the Jaffna District Cricket Association.

Entry Fees: Rs. 300/- per team.

Entries Close on: 5 00 p m, 11th May 99

Draw: 4.30 p m, 12th May 99

Tournament Rules and Entry Forms may be obtained from ARUNS Sports Spot, 347, Kasturiar Road, Jaffna, after 12-30 p.m, today.

Secretary
J.S.S.C.

(C/7433)


## முஸ்லிம் ஊர்காவலர் சுடப்பட்டார்

மட்டக்களப்பு, மே 5

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் நாவற்குடா என்னும் இடத்தில் முஸ்லிம் ஊர்காவல்படை உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

அப்துல் காதர் மொகமட் முஸ்தாபா என அவர் அடையாளம் காணப்பட்டார்.

விடுதலைப் புலிகளே அவரைச் சுட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (உ-3-3-21)

## அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம், மே 5

இலங்கை அதிபர்சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கான முறையான நியமனக் கடிதங்கள் வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களை நிரப்புவதற்காக 01-01-1997 இல் கடமையாற்றிய — அதிபர் தரமுள்ள — யாழ். வலயத்திற்குட்பட்ட — பாடசாலை அதிபர்களை இன்று பிற்பகல் 3.30 மணிக்கு பணிமனைக்கு சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-3)

## நோயாளர் கப்பல்சேவை இன்று

யாழ்ப்பாணம், மே 5

கொழும்பில் மேலதிக சிகிச்சையைப் பெற வேண்டிய நோயாளர்களை ஏற்றிச் செல்லும் செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவின் சேவை இன்று நடைபெறுகின்றது.

இக் கப்பலில் செல்வதற்கென பதிவு செய்த நோயாளர் மற்றும் அவர்களது உதவியாளர்களை இன்று காலை 7-30 மணிக்கு முன் யாழ். ஆஸ்பத்திரிக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-15-139

## பாராட்டி கௌரவிப்பு

வலி. தென்மேற்கு. மே.5

ஆனைக்கோட்டை உயரப்புலம் ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ காலங்களில் தினமும் மகாபாரதத்தொடர் சொற்பொழிவு ஆற்றிய ஜெபரட்ணம் கோக்கலேயை ஆலயப்பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இந்தப் பாராட்டு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆலய [illegible] பெற்றது. (இ-185)

### தென்னிலங்கையில்

## கோஷ்டி மோதலில் கிரனேட் வீச்சுக்கள்!

கொழும்பு, மே 5

இங்கிரிய - கட்டுக்கம்பளை என்னுமிடத்தில் நேற்று முன்தினம் இரவு இரு கோஷ்டிகளுக்கிடையில் இடம்பெற்ற கோஷ்டிச் சண்டையில் இருவர் உயிரிழந்தனர்; 15 பேர் காயமடைந்தனர்.

கோஷ்டிச் சண்டையின் போது கிரனேட் வீசப்பட்டதில் ஓர் ஆணும், பெண்ணும் உயிரிழந்ததாகக் கூறப்பட்டது.

இது தொடர்பாகப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை —

பாணந்துறையில் நேற்று முன்தினம் இரவு இரு கோஷ்டியினருக்கிடையே ஏற்பட்ட மோதலின் போது இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் 11 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாணந்துறைப் பொலீஸார் சிலரைக் கைது செய்துள்ளனர். (உ-3-6)

## தெற்கில் தேர்தலை ஒட்டி தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, மே 5

தென் மாகாண சபைத் தேர்தல்களை முன்னிட்டு தெற்கில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் வன்செயல்களைக் கட்டுப்படுத்துமுகமாகவும் நெருக்கடி நிலைகளைச் சமாளிக்கும் நோக்குடனும் ஒவ்வொரு பொலீஸ் நிலையத்திற்கும் பொறுப்பாக ஒரு உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் நியமிக்கப்படுவதுடன் அங்கு கலகம் அடக்கும்பொலீஸாரும் நிறுத்தப்படுவர் என்று பிரதிப் பொலீஸ் மா அதிபர் வியனகே தெரிவித்தார்.

அனுமதிப்பத்திரங்களுடன் துப்பாக்கிகள் வைத்திருப்போரிடம் இருந்து தேர்தல் காலத்தில் அவை பெறப்பட்டு பொலீஸ் பாதுகாப்பில் வைக்கப்படும் என்றும் —

தேர்தல் முடிந்ததும் அவை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்கப்படும் என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார்

இதேவேளை —

தேர்தலை முன்னிட்டு காலி மாவட்டத்தில் புதிதாக நாற்பது வீதித் தடைகள் போடப்பட்டு சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

தேர்தல் ஊர்வலங்களை நடத்துவதற்கும் —

இரவு 10 மணிக்கு பின்னர் தேர்தல் பிரசாரத்துக்கு ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கும் —

எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

### வவுனியா ரயிலில்

## இளைஞனை மயக்கி உடைமைகள் கொள்ளை!

வவுனியா, மே 5

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம் மூலம் கொழும்பு சென்று அங்கிருந்து வவுனியாவுக்கு ரயிலில் சென்று கொண்டிருந்தவரை மயக்கி அவரது உடைமைகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

கரவெட்டியைச் சேர்ந்த யோகா தவராசா (30 வயது) என்பவரே உடைமைகளை இழந்தவராவார்.

நேற்று முன்தினம் இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்றிருந்தார்.

வவுனியாவில் உள்ள உறவினர்களைச் சந்திப்பதற்காக அவர் நேற்றுக் காலை ரயிலில் வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

வவுனியாவுக்குச் சமீபமாக ரயில் சென்று கொண்டிருந்த சமயம் ரயிலுக்குள் கோப்பி விற்பனை செய்தவரிடம் இருந்து கோப்பிவாங்கி அருந்தினார்.

திடீரென அவர் மயக்கம் அடையவே அவருக்கு உதவுவது போல் பாசாங்கு செய்த சிலர் அவரிடமிருந்த 10 ஆயிரம் ரூபா பணம், யாழ்ப்பாணம் திரும்புவதற்கான டிக்கெட் ஆகியவற்றை அபகரித்துக்கொண்டு தப்பிவிட்டனர்.

தற்சமயம் அவர் வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுகின்றார். (உ-3-164)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 5

தேசிய கலை இலக்கியப் பேரவை நடத்தும் திறனாய்வு பற்றிய வாராந்த தொடர் கருத்தரங்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறும்.

க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் ''தமிழ் இலக்கியத்திறனாய்வில் மார்க்ஸிசப் பார்வை'' என்னும் தலைப்பில் பேராசிரியர் நா. சுப்பிரமணியன் கருத்துரை வழங்குவார். (உ-3)

## முல்லைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

முல்லைத்தீவு)

★ கப்டன் பரிதி (சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன்— யாழ்ப்பாணம்)

★ கப்டன் ஈழமைந்தன் (நவரெட்ணம் நவசீலன்— கிளிநொச்சி)

★ கப்டன் பிரியவன் (நித்தியானந்தன் உதயகுமாரன்—யாழ்ப்பாணம்)

★ கப்டன் வான்கவி (குமாரசாமி செல்வரஜனி— யாழ்ப்பாணம்)

★ 2 ஆம் லெப்டினன்ட் ஈழவன் அல்லது பாண்டியன் (அன்டனிதாஸ் றொனால்ட் — கிளிநொச்சி)

★ 2 ஆம் லெப்டினன்ட் தமிழிவன் (சுப்பிரமணியம் விக்கினேஸ்வரி — யாழ்.

★ 2 ஆம் லெப்டினன்ட் வள்ளி (அற்புதலிங்கம் சுமித்தா—யாழ்ப்பாணம்)

★ நளியரசி (காண்டீபராசா சகுந்தலாதேவி— யாழ்ப்பாணம்)

(உ-3-21-164)

## கூட்டம்

வடமராட்சி, மே 5

வல்லிபுரப் பிரதேச பாதுகாப்புச் சபைக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி புலோலி வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது

இந்தப் பிரதேசத்தில் மணல் அள்ளுவதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராயப்படவுள்ளது. (உ-173)

## மடு அகதிகளை...

[முதலாம் பக்கத்தொடர்]

பாணம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதல் தொகுதியாக 300 குடும்பங்கள் வார இறுதியில் திருமலைக்கு அழைத்துச் செல்லப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 ஆயிரம் குடும்பங்கள் அந்த முகாம்களில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்)
காரி தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணைகள் முடிவடைந்த பின்பே அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது தொடர்பான முடிவு எடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார். (உ-3)

## நெடுங்கேணி...

[முதலாம் பக்கத் தொடர்]
குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை.

இந்த மோதலின் பின்னர் மக்கள் குடியிருப்புகளை நோக்கிச் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று புலிகளின் குரல் தெரிவித்தது. (உ-3-164)

## மடுவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்)
படையினரின் பிரசன்னத்துடன் உற்சவத்தை நடத்தினால் மோதல்கள் உருவாகி அப்பாவி யாத்திரிகர்கள் பாதிக்கப்படும் நிலை உருவாகும் என்றும்—

ஆயர்கள் தமது மகஜரில் ஜனாதிபதிக்கு தெரிவிக்க இருப்பதாக மன்னார் ஆயர் அதி வண. ராயப்பு யோசெப் தகவல் வெளியிட்டார்.

ஓரிரு தினங்களில் ஜனாதிபதிக்கு இந்த மகஜர் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வேலை நிறுத்தம் தொடர்கிறது

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்ந்து எட்டாவது நாளாக நேற்று நடைபெற்றது.

சம்பள முரண்பாடு நீக்கம் ஒய்வூதியத்திட்டம் போன்ற பல கோரிக்கைகளை முன் வைத்து நடைபெறும் இந்தப் போராட்டம் இன்றும் தொடர்ந்து இடம்பெறும் என்றும் —

கோரிக்கைகள் நிறைவேறும் வரை அது தொடரும் என வும்— தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக நேற்று பல் கலைக்கழகத் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளையுடன் சம்பந்தப்பட்டோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## சுவீடனில்...

(முதலாம் பக்கத் தொடர்)
னுக்கு அங்கு அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டதை அடுத்து அவர் கனடா செல்வதற்கு முயற்சி மேற்கொண்டிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

நெஞ்சிலும் தலையிலும் சூட்டுக்காயங்கள் காணப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

கொலைக்கான காரணம் தெரிய வரவில்லை எனக் கூறப்பட்டது. (உ-3-21)

# ஆறு அரச மருந்தகங்கள் புனரமைக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், மே 5

யாழ். குடாநாட்டில் உள்ள 6 அரசினர் மருந்தகங்களின் புனரமைப்பு வேலைகளை யாழ். நிர்மாணத் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பளை, வரணி மற்றும் மந்திகை, அளவெட்டி, வட்டுக்கோட்டை, கோப்பாய் ஆகிய இடங்களில் உள்ள மருந்தகங்களே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன எனவும் —

இந்த மாத நடுப் பகுதியில் மந்துவில், தாவடி ஆகிய இடங்களில் உள்ள சுகாதார நிலையங்களின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் —

யாழ். நிர்மாணத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (2-7)

## புதிய அலுவலகம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்குக்கான பிரதம பொறியியலாளர் அலுவலகத்துக்கென பத்து இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்றை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் யாழ். கடற்கரை வீதியில் உள்ள— வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு — கிழக்கு மாகாணப் பணிப்பாளர் அலுவலகக் கட்டடத்தின்— ஒரு பகுதியிலேயே மேற்படி பிரதம பொறியியலாளர் அலுவலகம் இயங்கிவந்தது.

தற்போது புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்பகட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ரெலோ தலைவரின் நினைவு தினம்

யாழ்ப்பாணம், மே 5

ரெலோ அமைப்பின் முன்னாள் முதல்வர் ஸ்ரீசபாரத்தினத்தின் 13 ஆவது நினைவு தினமான நாளை யாழ்ப்பாணத்தில் விசேட நிகழ்வுகளுக்கு அந்த அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது.

ஆலயங்களில் விசேட பூசைகள், சிரமதானப் பணிகள், இரத்ததானம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (உ-3-173)

# திருமலையில் ஓட்டோ $2\frac{1}{2}$ வருடங்கள் தவம்!

## யாழ். வருவதற்காக!!

யாழ்ப்பாணம், மே 5

யாழ். நிர்மாணத் திணைக்களத்தின் பாவனைக்கென ஒன்றரை லட்சம் ரூபா செலவில் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட ஓட்டோ ஒன்று, இரண்டரை வருடமாகத் திருகோணமலையில் தவம் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் மேற்படி திணைக்களத்தின் பாவனைச்கென எந்த வகையான வாகன வசதியும் இதுவரை வழங்கப்படவில்லை

எனவே இந்தக் குறையைத் தீர்ப்பதற்காகவே நிர்மாணத் திணைக்களத்தின் பராமரிப்புக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து குறிப்பிட்ட ஓட்டோ கொள்வனவு செய்யப்பட்டது.

அதனைத் திருமலையில் இருந்து யாழ். எடுத்து வருவது குறித்து இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை மேற்படி திணைக்களத்தின் பாவனைக்கென வாகன வசதிகள் வழங்கப்படாததால் தமது திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் வேலைகளைத் துரித கதியில் மேற்கொள்ள முடியாதிருப்பதாக அந்தத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார். (உ-7)

# 20 பொது மக்கள் நேட்டோவின் தாக்குதலில் பலி

பெல்கிறேட், மே 5

யூகோஸ்லாவியாவின் தென் பகுதியில் உள்ள சூஷிர் புலிக்கா நகரில் கடந்த செவ்வாயன்று நேட்டோ நடத்திய வான் தாக்குதலில் 20 சிவிலியன்கள் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். முந்நூறு வீடுகள் வரை சேதமடைந்துள்ளன.

ஷிர்புலிக்கா நகரில் பொது மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதியில் நேட்டோவின் பதினொரு ஏவுகணைகள் வீழ்ந்தன என சேர்பியத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

கட்டட இடிபாடுகளுக்கு இடையில் சிக்குண்டவர்களைத் தேடும் பணியில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இதேவேளை —

மெசடோனியாவுக்கு எண்ணூறு கனடிய இராணுவத்தினரை நேட்டோவின் அழைப்பின் பேரில் கனடா அனுப்பியுள்ளது. (ஐ-க)

# பிரதேச சபைக்கு 'பக்ஸ்' வசதி

திருநெல்வேலி மே 5

நல்லூர் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துக்கு பக்ஸ் இயந்திரம், கணணி, உழவு இயந்திரம் என்பன கொழும்பிலிருந்து தருவிக்கப்படவுள்ளன.

கொழும்பு சென்றுள்ள சபையின் தலைவர் க. மணி பல்லவராஜன் இவற்றை எடுத்து வருவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-135)

## இன்னும்...

(முதலாம் பக்கத் தொடர்)
இராணுவச் சிப்பாய் ஒருவர் கூட கொல்லப்படவில்லை என்பது உண்மை சிப்பாய்களின் எண்ணிக்கை குறையும் பட்சத்திலேயே அவர்கள் இறக்கும் சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது.

இளைஞர்கள் படையில் இணைவதற்கான சகல ஏற்பாடுகளும் தற்போது செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி யுத்தத்தை முடித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அனைவரும் முயல வேண்டும் — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-6-ரீ)

## உலக நாடுகளை...

(முதலாம் பக்கத் தொடர்)
உரிய ஒரு விடயமாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

தமிழ் இளைஞர், யுவதிகள் ஒரு தொழில் வாய்ப்பைப் பெற இரகசியப் பொலீஸ் அறிக்கை பெற வேண்டிய நிலை இருக்கும்போது எப்படி அவர்களைப் படைகளில் சேர்ப்பார்கள்.

எந்தக்காலத்திலும் நடக்கக்கூடிய காரியம் அல்ல இது. அப்படியிருக்கும்போது அரசு வெளிநாடுகளை ஏமாற்ற அரங்கேற்றும் புதிய நாடகமே இது — என்று அவர் மேலும் கூறினார். [உ-3]

## படைக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]
இளைஞர்களைச் சேர்க்கும் அறிவிப்பு வந்துள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவம் குறித்து தமிழ் இளைஞர், யுவதிகளின் மனதில் பதிந்துள்ள வடுக்கள் ஒரு போதும் அவர்களைப் படையில் சேர அனுமதிக்காது அவர்கள் படைகளில் சேரப் போவதில்லை.

அரசின் அறிவிப்பானது உள்நோக்கம் கொண்ட சதி முயற்சி நடவடிக்கையாகும்—என்றார். (உ-3)


## பற்றறி பாவனையாளர்களே!

உங்களுக்கு வேண்டிய [All Sizes] இறக்குமதி செய்யப்பட்ட லூக்காஸ் வெள்ளை பற்றறிகளையும் [White Lucas Imported Battery] சிலோன் கறுப்பு வெள்ளை பற்றறிகளையும், சகல மோட்டார் சைக்கிள் பற்றறிகளையும் தரமான அசிட் [Acid] டையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள

"செல்வம்ஸ்" SELVAMS

உங்கள் மோட்டார் வாகனங்களுக்கு பொருத்தப்படும் "லூக்காஸ்" பற்றறிகளுக்கு உத்தரவாதத்துடன் [Garantee] அக்காலப் பகுதிக்கு இலவச சேர்வீஸ் செய்து கொடுப்பவர்கள்

"செல்வம்ஸ்"

நீண்டகால பாவனைக்கு தரமான "லூக்காஸ்" பற்றறிகளையே கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள். உங்கள் பற்றறிகளை சிறந்த முறையில் சார்ஜ் [Recharging] செய்வதற்கு

செல்வம்ஸ்

கிளை-

செல்வம்ஸ்
220 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

"செல்வம்ஸ்"
443, கே. கே. எஸ். வீதி
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல- 2642

(65427)



## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

A/L 2001

கலை - வர்த்தகம்

பிரிவு II ஆரம்பம் 8-5-99 சனி 8-00 மணி

| | |
|---|---|
| பொருளியல் | திரு. S. வரதராஜன் |
| வணிகக்கல்வி | திரு. வே. முரளி |
| கணக்கீடு | திரு. B. முகுந்தன் |
| பொதுவினா | திரு. அ. குமாரவேல் |
| அளவையியல் | திரு. R. P. சர்மா |
| தமிழ் | பிரபல ஆசிரியை |
| இந்துநாகரிகம் | திரு. ஜோதீஸ்வரன் |
| நாடக-அரங்கியல் | திரு. ஜெ. ரஞ்சினி |
| புவியியல் | திரு. இக்னேசியஸ் |
| கிறிஸ்தவம் | திரு. வசந்தன் |

அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு: இப்பிரிவிற்கு சகல பாடங்களும் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

(64446)



## பாராட்டும்! கௌரவிப்பும்!

98 O/L எடுத்து சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு பாராட்டும் ஆசிரியர்களுக்கு கௌரவிப்பும் 10-05-99 4 மணிக்கு அனைவரையும் அழைக்கிறோம்.

O/L Day Class
இன்று காலை ஆரம்பம்

சயன்ஸ் அக்கடமி
நல்லூர்.

(65431)



## BARATHY

சித்தன்கேணி
A/L 2001

பொருளியல் - சண்
வணிகக் கல்வி - பசில்
கணக்கீடு - முகுந்தன்
பொது வினா - குமாரவேல்
அளவையியல் - R. P. சர்மா
தமிழ், இந்து நாகரிகம் பாலா
புவியியல் - குமரன்
நாடக-அரங்கியல் - நிஷாந்தன்
கிறிஸ்தவம் - வசந்தன்

புதிய பிரிவு
இன்று ஆரம்பம்
05-05-99
புதன் 3 மணிக்கு

அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

(65447)



## விஷ்ணுவின்

பிரமிட் வீடியோ CD வெளியீடு
① பூந்தோட்டக் காவல்காரன்
① நினைவே ஒருசங்கீதம்
அடுத்த வெளியீடு
① ராஜஸ்தான்

விஷ்ணு வீடியோ
கோண்டாவில்.

(65454)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-05-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org